உ

ஓம்

பரப்பிரஹ்மணே நம:

# ஆனந்தபோதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"—திருவள்ளுவர்.

(ALL RIGHTS RESERVED.)

| தொகுதி 7 | துன்மதிஞு கார்த்திகைமீ கஉ<br>1921ஞு நவம்பர்மீ 15உ | பகுதி 5 |
|---|---|---|

## கடவுள் வணக்கம்.

ஆசைநிக ளத்தினை யிர்த்தூளி படவுதறி
யாங்கார முளையை யெற்றி
அத்துவித மதமாகி மதமாறு மாறுக
வங்கையின் விலாழி யாக்கிப்
பாசவிரு டன்னிழ லெனச்சுளித் தார்த்துமேற்
பார்த்துப் பரந்த மனதைப்
பாரித்த கவளமாய்ப் பூரிக்க வுண்டுமுக
படாமன்ன மாயை நூறித்
தேசுபெற நீவைத்த சின்முத்தி ராங்குசச்
செங்கைக்கு ளேய டங்கிச்
சின்மயா னந்தசுக வெள்ளம் படிந்துநின்
றிருவருட் பூர்த்தி யான
வாசமுறு சற்சார மீதென்னை யொருஞான
மத்தகஜ மென வளர்த்தாய்
மந்த்ரகுரு வேயோக தந்த்ரகுரு வேமூலன்
மாபில்வரு மௌன குருவே.

வொளியான நீயென் மனவெளி யூடு விரவினையா
வெளியாருங் கண்ணு மிரவியும் போனின் றுலாவுவன்கா
ணளியாருங் கொன்றைச் சடையாட வம்புலி யாடக்கங்கைத்
துளியாட மன்று ணடமாடு முக்கட் சுடர்க்கொழுந்தே.

கொழுந்தா துறைமலர்க் கோதையர் மோகக் குரைகடலி
லழுந்தாத வண்ணநின் பாதப் புணைதந் தருள்வதென்றோ
வெழுந்தா தரவுசெ யெம்பெருமானென் றிறைஞ்சி விண்ணோர்
தொழுந்தாளதை யேவெண் பொடிபூத்த மேனிச் சுகப்பொருளே.

# ஆனந்தபோதினி

துன்மதி௵ கார்த்திகைமீ ௧௨

## ஓர் அதிசய நாடு.

சச்சிதானந்தப் பரம்பொருளாகிய பகவானால் படைக்கப்பட்ட இப்பூமண்டலத்தில் அனேக நாடுகளுள வென்பது யாவரு மறிந்த விஷயமே. அந்த நாடுகளி லெல்லாவற்றிலும் ஒரு நாட்டில்தான் இப்போது நாம் கூறப்போகும் அனேக அதிசயங்க ளிருக்கின்றன.

இவ்வுலகிலுள்ள எல்லா வஸ்துக்களும் பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என்ற ஐந்து பூதங்களி லடங்கியிருக்கின்றன. இந்த ஐந்திலும் முதன்மையானவைகளும், விசேஷமானவைகளும் இந்த நாட்டிலேதா னிருக்கின்றன. இவற்றில் முதலாவது பிருதிவியையெடுத்துக் கொள்வோம்.

பூமியில் சத்துவ பதார்த்தங்களாகிய சம்பாநெல், வாழை, கமுகு, தென்னை இவைகளும், மா, பலா, மல்லிகை, முல்லை முதலியவைகளும் உற்பத்தியாகிற பூமியே உத்தமமான சத்துவ பூமியெனப்படும். இவை யாவும் இந்த நாட்டில் விளைகின்றன. மேலும் மருதம், முல்லை, குறிஞ்சி நெய்தல் முதலிய நால்வகை நிலங்களும் இந்நாட்டிலுள்ளன. நிலவள நீர்வளத்தில், காலால் மடைதள்ளி நீர் பாய்ச்சக்கூடிய வளப்பமுடையது இந்நாடு. பஞ்சலோகங்களும், நவரத்தினங்களும் உற்பத்தியாவது. உலகத்திலுள்ள எல்லா மலைகளிலும் பிரம்மாண்டமானதும், உலகில் வேறெங்குமில்லாத அதிசயக் காட்சிகளை யுடையதும், இதுகாறும் மனிதர் சிகரமட்டும் ஏற முடியாததுமான மலை இந்நாட்டில்தா னிருக்கிறது. சுருக்கமாகக் கூறுமிடத்து மனித வர்க்கம் நாகரீகத்தோடும், சுகத்தோடும் வாழ்வதற்கு அவசியமான பொருள்கள் யாவும் இந்நாட்டில் உண்டாகின்றன. இந்த விஷயங்களில் இதற்குச் சமானமானதும், உயர்வானதுமான நாடு உலகில் வேறொன்றுமில்லை யென்பது உண்மை.

2. அப்பு.—அதாவது ஜலம். இந்நாட்டில் மிக்க பரிசுத்த மானதும், தெய்வீகம் பொருந்தினதும், உலோகச்சத்து சேர்வதால் பெருவியாதி முதலிய கொடிய வியாதிகளையும் நீக்கக் கூடியதுமான ஜீவநதிகளும், ஆறுகளும் பல விருக்கின்றன.

3. தேயு.—(அக்னி) இந்த நாட்டில் அக்னியினுடைய விசேஷ குணங்கள் யாவும் உணரப்பட்டுப் பூசிக்கப்படுவதோடு, கடற்கரையில் தீபஸ்தம்பத்தின் உச்சியில் வைக்கப்பட்ட தீபம் கடலில் வரும் கப்பல்களுக்கு எப்படி க்ஷேமமாக இறங்கத்தக்க கரையைக் காட்டுகிறதோ அதுபோல், இந்நாட்டில் ஒரு புண்ணிய க்ஷேத்திரத்தி லுள்ள குன்றின்மேல் ஏற்றப்படும் தீபம் ஆன்மாக்கள் பிறப் பிறப்பாகிய கடலிலிருந்து முத்தியாகிய கரையைச்சேர வழிகாட்டியா யிருக்கிறது.

4. வாயு.—இந்நாட்டில் தக்ஷிணத்திலுள்ள ஒரு மலையிலிருந்து வீசும் காற்று, அம்மலையிலுள்ள அரிய சஞ்சீவி மூலிகைகளினின்றும் வருவதால் மனிதர்களுக்குத் தேகாரோக்கியத்தை யளிப் பதோடு அனேக வியாதிகளை நீக்கும் குணமுடையதாகவு மிருக்கிறது. மனிதர் பொறுக்கமுடியாத குளிர்காற்றுவது, மனிதரைக் கொல்லும் தீக்காற்றுவது, மனிதரைப் பூமியில் மோதியடித்துக் கொல்லும் கொடுங்காற்றுவது இங்கில்லை.

5. ஆகாயம்.—மேல்நாட்டார் நான்கு பூதங்களே யுண்டு; ஆகாய மென்பது ஒரு பூதமல்ல என்ற கொள்கையுடையோர். ஆயினும் நான்கு பூதங்களுக்கும் காரண பூதமாயுள்ள அதிசூக்குமப் பொருள் ஒன்று உண்டென்று இப்போது மேல்நாட்டுச் சாத்திர நிபுணர்களும் ஒப்புக்கொள்கிறார்கள். ஆனால் இந்த நாட்டாரின் முன்னோர் அனாதிகாலந் தொட்டே யிதை யறிந்திருக்கிறார்கள். இதற்கே ஆகாயமெனப் பெயர்.

ஆகாயம் எங்கும் ஒரேவிதமாக இருக்க இந்த நாட்டில் அதற் கென்ன விசேஷ முண்டென்று கருதலாகும். மனிதனுடைய அந்தக்கரணங்களில் ஒன்றாகிய உள்ளம் என்பது சத்துவகுணம் வாய்ந்த பரிசுத்த ஆகாயம் போன்றது. இதில்தான் ஆண்டவன் நடனம் புரிகிறார் என்று நூல்களிற் கூறப்பட்டிருக்கிறது. இதற்குச் சிதாகாசம் (சித் + ஆகாசம்) என்று பெயர். இந்நாட்டிலுள்ள ஒரு புண்ணிய க்ஷேத்திரத்தில் இச்சிதாகாயத்தின் அறிகுறியாகப் பூதாகாயம்

காட்டப்பட்டு ஜனங்களால் அதில் நடிக்கும் பகவானுக்காகப் பூசிக் கப்படுகிறது. இது வெளியில் நீ காண்கிறபடி உன் உள்ளமாகிய ஆகாயத்தில் பகவான் நடனத்தைக் காண் என்று உயர்வான தனது ஞானமார்க்கத்தை அறிவுறுத்துகிறது. இது மதாதீனமான கொள் கை யாகையால் எச்சமயத்திற்கும் ஒத்ததாகும். இவ்வாறு பஞ்ச பூதங்களிலும் விசேஷமுடையது இந்நாடு.

சீதோஷ்ணம்:—சீதோஷ்ணத்திலும் இந்நாடு சிறந்ததே. கால் தரையில் பட்டால் வெளுத்து மரத்துப்போகச் செய்து ஜனங் களைக் கொல்லத்தக்க குளிரும், வெளுத்த தேகமும், செம்பட்ட உரோமமும், பூனைக்கண்ணுமுடைய ஜனங்கள் ஜனிப்பனவும், உறை பனியுடைய்பனவுமான மேல்நாடுகளைப் போன்றதுமல்ல. நெருப்பினால் தீய்க்கப்பட்டதுபோன்ற சிறிய சுருண்ட உரோமமும், பயங்கர மான கரியதேகமும் உடைய ஜனங்கள் உற்பத்தியாவதும், தேகத் தில் உடையணிய விரும்பக்கூடாத அவ்வளவு உஷ்ணமுடையது மான ஆப்ரிகா முதலிய நாடுகளைப் போன்றதுமல்ல. சமமான சீதோஷ்ண முடையது; உஷ்ணதேசம், குளிர்தேசம் இரண்டிலும் உற்பத்தியாகும் பதார்த்தங்களும், தானியங்களும் உண்டாகக் கூடி யது.

நாகரீகமாக வாழும் ஜனங்களுக்கு அவசியமாக வேண்டிய பொருள் என்னென்ன வுண்டோ அவை யாவும் உற்பத்தியாவது. இத்தேசத்தார் எதிலும் அன்னிய நாட்டாரிடமிருந்து எப்பொருளை யும் எதிர்பாராமலே சுகமாய் வாழலாகும். மனித வாழ்க்கைக்கு அவசியமான மிருகங்களனைத்தும், பட்சிகளனைத்தும் இந்த நாட்டி லுண்டு. உலகில் நாகரீகம் ஜனித்தது இந்நாட்டிலேயே. அநாதிமுதல் மெய்ஞ்ஞானம் பிரகாசித்துக்கொண் டிருப்பது இந்நாட்டிலேயே. உலகத்திற்குச் சகல கலைக்கியானங்களையும் போதித்தது இந்நாடே. உலகை வசப்படுத்தி உலகோர்க்குத் தெய்வ பக்தியையும், மெய்ஞ் ஞானத்தையும் போதிக்க எண்ணிறந்த மகாத்மாக்கள் அவதாரம் செய்ததும், செய்துகொண் டிருப்பதுமாகிய புண்ணியபூமி யிதுவே. உலகிலுள்ள எல்லா நாடுகளைக் காட்டிலும் தெய்வ சிந்தனையும், தெய்வ பக்தியும், சீவகாருண்யம், தருமம் முதலியவைகளும் மலிந் துள்ளது இப்பூமியே. உலகபோகங்க ளெல்லாம் அநித்தியமெனக் கண்டு வெறுத்து ஆண்டவன் ஒருவனிடம் மட்டுமே பற்றுடையவர்க ளாய், மற்ற யாவற்றையும் தம் தேகத்தைக்கூட மறந்து, இந்த அழி

யும் தேகத்திலிருக்கும்போதே மோக்ஷ மென்னும் பேரின்ப நிலையை அனுபவிக்கும் மகான்களை இந்நாட்டில் மட்டுமே எப்போதும் காணலாம். இந்நாட்டின் வட எல்லையாகவும், ஒருவரும் ஜெயிக்கமுடியாத காவலனாகவும் ஓர் ஒப்புயர்வற்ற மலை யிருக்கிறது. அம்மலையில் உலகில் மற்ற எங்குமில்லாத பல அதிசயங்களைக் காணலாம். முக்கியமாய்ப் பேரின்பத்தை யனுபவித்துக்கொண் டிருப்போரும், அஷ்டமாசித்திகள் கைவந்தோருமாகிய மகான்களின் கூட்டங்களைக் காணலாம். இவர்கள் கால அமைப்பிற்குத் தக்கபடி அந்நாட்டின் க்ஷேமத்திற்கும், தெய்வீகம் பொருந்திய மெய்ஞ்ஞான மதத்திற்கும் காவலாளிகளாக விருக்கின்றனர். இவர்களில் நீண்ட ஆயுள் உடையோர்களு முளர். இவர்கள் யாவரும் ஆத்ம சக்தியில் முதன்மை பெற்றோர்.

மதம்:—உலகில் ஒவ்வொரு நாட்டிலும் உள்ள ஜனங்களில் அந்தஸ்து, செல்வம், தொழில் முதலியவற்றால் பல பிரிவுகளிருப்பினும் ஒரே ஜாதி, ஒரே மதம் (மதத்திலும் உட்பிரிவுகளில்லாமலில்லை) என்றுவது கூறிக்கொள்ளுகிறார்கள். இந்நாட்டிலோ பொதுவாக நான்கு ஜாதிகளாயினும் உட்பிரிவுகளால் பல ஜாதிகளாகவிருக்கிறார்கள். இங்கு மதங்களும் பலவே ஆயினும், இந்த நாட்டு மக்களின் மதம் பலவகைகளில் சிறப்புடையது.

1-வது—இம்மதம் அநாதியானது.

2-வது—உலகில் இப்போதுள்ளனவும், இனி உண்டாகக் கூடியனவுமாகிய எல்லா மதங்களுக்கும் அஸ்திவாரத்தை யிம்மதத்தில் காணலாம்.

3-வது—எல்லா மதங்களின் சாராம்சங்களும் இதில் இருக்கின்றன.

4-வது—“எல்லா சீவராசிகளும் ஒரே யிடத்திலிருந்து வந்தன. மறுபடி அந்த ஒரே யிடத்தில் போய்த்தான் சேரவேண்டும். எல்லா மதங்களும் அந்த இடத்திற்குப் போய்ச் சேரவே வழி காட்டுகின்றன. ஒவ்வொரு மதமும் அந்த ஒரே யேணியின் ஒவ்வொரு படிபோன்றதே. எந்த மதத்தில் பிறந்தாலும் அம்மதத்தின் நெறிப்படி நடப்பவன் படிப்படியாய் மேலேறிச் சென்று முடிவில் அந்த விடத்தைச் சேர்வான்” என்ற பெரிய உண்மையையும், இவற்றாலும், ஒவ்வொரு மதமும் கடவுள் அருள் பெற்றவர்களாலேயே

அந்தந்தக் காலத்திற்கும், இடத்திற்கும் தக்கபடி ஸ்தாபிக்கப்பட்ட தாலும், எல்லா மதங்களாலும் பாதிக்கப்படுகிற கடவுள் ஒருவரே யாதலாலும், எந்த மதத்தையும் துவேஷிக்க லாகாதென்ற பெரிய நீதியையும் இம்மதம் போதிக்கிறது.

5-வது—நாமரூபமற்ற கடவுள்மேல் மனதை நாட்டி அவரை யடையும் நெறியிற் செல்வது எல்லாருக்கும் சுலபமாக ஆகக் கூடிய காரியமல்ல. ஏனெனில், மனிதரின் அறிவு விளக்கத்தில் பலதார தம்மியங்க ளிருக்கின்றன. ஒவ்வொருவரும் படிப்படியாய் மேலே றும்படி அவரவர்கள் அறிவின் நிலைமைக்குத்தக்க மார்க்கங்கள் இம்மதத்தில் கூறப்பட்டிருக்கின்றன.

6-வது—இம்மதத்தில் கூறப்பட்டுள்ள முத்தி நிலை இச்சன்மத் திலேயே இத்தேகத்தி லிருக்கும்போதே பிரத்தியட்சமாக வடைந் தனுபவிக்கக் கூடியது.

இவை யாவும் சற்றேறக்குறைய இந்நாட்டில் இயற்கையாக அமைந்துள்ள விசேஷங்களாகும். இனி கால வித்தியாசத்தால் இங்கு நிகழும் அதிசயங்கள் பல.

1. எல்லா நாடுகளும் பூர்வீகத்தில் அநாகரிகமான நிலைமையி லிருந்து வர வர நாகரீகம், செல்வம், கீர்த்தி, செல்வாக்கு யாவற்றி லும் மேலோங்கிக்கொண்டு வருகின்றன.

இந்நாடோ அநாதி முதல் நாகரீகம், செல்வம், கல்வி யாவற்றி லும் எல்லா நாடுகளை விட-வும் உன்னத நிலையிலிருந்து வர வரச் சிரத்தையற்று, அந்நிய நாட்டார் மயக்கில் சிக்கி, வெளியாடம்பரங் களுக்கும், பகட்டுக்கும் ஆசை வைத்துச் சுயமதிப்பையும், கௌர வத்தையும் இழந்து தன் காலுக்குத் தானே தளைபூண்டு துன்பத்தி லும், இக்கட்டுகளிலும், தரித்திரத்திலும் தலைமை பெற்றதாகி இப்போதுதான் மயக்கம் சற்று தெளிந்து கண்களைத் துடைத்துக் கொண்டிருக்கிறது. உலகில் எல்லா நாட்டாரும் தங்கள் முன்னோர் களின் ஆசாரங்களைக் கௌரவத்தோடு போற்றிக் கைவிடாதிருக் கிறார்கள். அப்படி அன்னியர் ஆசாரங்களில் எதையேனும் பின்பற்றுவதாயின் அதைத் தீர ஆலோசித்துத் தங்களுக்கு அது அவசியமானதாகவும் பயனளிக்கத்தக்கதாகவு மிருந்தால்தான் அதைப் பின்பற்றுவார்கள்.

2. இந்த நாட்டாரோ அன்னியர் ஆசாரங்களால் தங்களுக்குண்டாகத்தக்க தீங்கையும், நஷ்டத்தையும், அதன் அனுவசியத்தையும், நம் தேச மதாசாரங்களை நாம் அலட்சியம் செய்வதால் அன்னியர் நம்மை இகழ்ந்து அகௌரவமாகக் கருதுகிறார்களே யென்பதையும், ஒன்றையுமே கருதாமல், கண்மூடித்தனமாய் அன்னியர் ஆசாரங்களைப் பின்பற்றி இதுவே மிக்க நாகரீக சீர்திருத்தம் என்று கருதுகிறார்கள். மேல்நாட்டான் ஒருவன் சிரசின் ஒருபக்க மீசையை யெடுத்துவிட்டு வருவதைக் கண்டால் ஓகோ இது புதுச் சீர்திருத்தம் என்று உடனே க்ஷவரகனைத் தேடுவார்கள்; அல்லது தாங்களேகூட கத்திகொண்டு ஒரு பக்க மீசையை யெடுத்துவிடுவார்கள். அத்தகைய நாகரீக மயக்கம் இந்நாட்டாரில் அநேகர் மண்டைவரையில் ஏறியிருப்பது இவர்கள் நாடு செய்த பாபமோ, முன்னோர்செய்த பாபமோ, தெரியவில்லை.

எவ்வளவோ அநுகூலங்களை யுத்தேசித்து ஏற்படுத்தியிருக்கும் உடைகளை யலட்சியம் செய்து அனுவசியமானவையும், அதிகச் செலவுடையவையுமான மேல்நாட்டார் உடைகளை யணிவார்கள்.

3. உலகில் எந்த நாட்டாரும் தங்கள் தாய்ப்பாஷையையே சிறந்ததாக மதித்து விசுவாசித்துத் தங்கள் இலௌகிக வைதீக விஷயங்களிலெல்லாம் அதையேயுபயோகிப்பார்கள்.

இவர்களோ தங்கள் தாய்ப்பாஷையை யலட்சியம் செய்து அன்னிய பாஷையைச் சிலாகித்து அப்பாஷையில் பேசுவதே கௌரவம் என்று கருதுவதில் சிங்கக்குட்டிகள். சுற்றத்தார்க்குக் கடிதம் எழுத ஆங்கிலக் கல்வி போதுமானவரை தெரியாவிட்டால் கையொப்பமாவது ஆங்கிலத்தில் போடுவதுதான் கௌரவமென்று கருதி அதைமட்டுமாவது கோணல்மாணலாக வெழுதக் கற்றுக் கொள்ளும் புத்திமான்கள் பலர் இந்நாட்டிலுளர்.

4. உலகிலுள்ள மற்ற நாட்டாரெல்லாம் சுயாதீனமான வர்த்தகம், விவசாயம், கைத்தொழில் இவற்றையே கௌரவத் தொழில்களென மதித்து அவற்றால் செல்வவந்தர்களாகிச் சிறப்புற்றால், இந்த அதிசய நாட்டார் அத்தொழில்களை அகௌரவத் தொழில்களென்று அவமதித்து அதமமாகிய சேவகாவிர்த்தியையே மிக்க கௌரவமென்று கருதி அல்லற்படுவார்கள்.

5. உலகில் எல்லா நாட்டாரும் தங்களுக்குள் அந்தஸ்து, தொழில் முதலிய வற்றில் எவ்வளவு பேதங்களிருப்பினும் தாய் நாட்டின் க்ஷேமத்தைப்பற்றிய விஷயங்களில் ஒற்றுமை பலம் என்ற உண்மையையறிந்து, தங்களுக்குள் இருக்கும் சில்லரைச் சச் சரவுகளையும், கட்சிபேதங்களையும் ஒழித்துவிட்டு ஒருமனதாய் ஒற்றுமையோடு வேலை செய்வார்கள். எதிரிகள் நம்மை வெல்ல வேண்டுமாயின் நமக்குள் கட்சிகளையுண்டாக்கி நம்மைப் பிரித்துப் பிறகு சுலபமாக அடக்கிவிடுவார்கள் என்ற உண்மையை யறிந்து ஒற்றுமையோடு வேலைசெய்கிறார்கள்.

ஆனால் நமது அதிசய நாட்டாரோ, எல்லாக் கலைக்கியானங் களும் பேசத் தெரிந்திருந்தும், ஒற்றுமையாய் ஒரு காரியத்தைச் செய்யக் கூட்டம் கூடியதே அக்கிராசனாதிபதிப் பட்டம் எனக்கு வேண்டும், அவனென்ன என்னிலும் பெரியமனிதனா என்று சச்ச ரவு விளைவித்து ஆரம்பத்திலேயே இரண்டு கட்சிகளாகப் புண்டு கொள்வார்கள். தாங்கள் ஒற்றுமையாக ஒரு கட்டாக விருக்க வேண்டுமென்பதை விட்டுவிட்டுத் தங்களுக்குள் கட்சிபேதங்களை யுண்டாக்கிக்கொண்டு, ஒருவருக்கொருவர் தீங்குசெய்யத்தொடங்கி எதிரியின் வேலையைச் சுலபமாக்கித் தங்களுக்கும் தங்கள் இனத் தார்க்கும் அழிவைத் தேடிக்கொள்வார்கள். இவ்வாறு எதிரி களுக்கு உதவிசெய்யும் ஜாதியாராவது தங்களுக்குத் தாங்களே தீங்கு விளைவித்துக் கொள்கிறவர்களாவது உலகில் வேறெந்த நாட்டிலும் இல்லையென்பது உண்மை

6. உலகில் எல்லா நாட்டாரும் தங்கள் தாய்நாட்டின் க்ஷேமத்தையும், தங்கள் நாட்டாரின் கஷ்டத்தையும் முதலாவதா கக் கவனித்து அந்த விஷயங்களுக்குத் தாராளமாகப் பொருளுத வியும் மற்ற உதவிகளும் செய்கிறார்கள்.

அந்தோ ! இந்த நாட்டாரோ செல்வமுள்ளவர்கள் தாய்நாட் டைப் பொறுத்த விஷயங்களுக்கு ஒரு காலணா கொடுக்கவும் பிரி யப்படமாட்டார்கள். அதிகார வர்க்கத்தினர்களுடைய மதிப்பைப் பெறவும், அர்த்தமில்லாத காலணா உப்பிற்கும் உதவாத, பட்டங்க ளைப் பெறவும் அவற்றையே பெரியகௌரவமாகக் கருதித் தாராள மாய் நூறுநூறாக அள்ளிப் போட்டி போட்டுக்கொண்டு கொடுப் பார்கள்.

7. குலத்திற்குக் கேடுவிளைவிக்கும் கோடரிக்காம்புகள் இந் நாட்டில் மிக்க மலினம்.

இப்போது நாம் கூறிய இத்தீயகுணங்களெல்லாம் பிற்காலத்தில் இந்நாட்டாரிடம் தோன்றியுள்ளவை. இவற்றால் தேசாபிமானம் பாஷாபிமானம் மதாபிமானம் முதலியவை குறைந்துகொண்டே வந்தன. ஆயினும் தருமம், சீவகாருண்யம், உண்ட உப்பிற்கு இரண்டகம் செய்யாமை, கடவுள் பக்தி, இராஜபக்தி, ஞானம், அழியும் உலக போகங்களின் அநித்திய உணர்ச்சி முதலிய உத்தம குணங்கள் மட்டும் இன்னும் இந்நாட்டில் அழியாமலே மிகக் கஷ்டத்தோடு பதுங்கிக்கொண்டேனும் சிரஞ்சீவிகளாக விருக்கின்றன. இதுவே இந்நாட்டின் தெய்வீகத் தன்மைக்குப் பேரறிகுறியாக விருக்கிறது. இதனாலும், இம்மையிலேயே பரமாத்மாவின் அருளைப்பெற்றுச் சதா அவனோடு கலந்து பேரானந்தத்தை யனுபவித்துக்கொண்டிருக்கும் மகான்கள் அனேகர் இந்நாட்டிலிருப்பதாலும், அத்தகையோர் இன்னும் அவதரித்துக் கொண்டேயிருப்பதாலும் இந்த நாட்டார் இனியேனும் வீண்மயக்கம் தெளிந்து ஒற்றுமையின் தன்மையை யுணர்ந்து தங்கள் தாய்நாடு தன் பூர்வீக உன்னத நிலையை யடையும் வண்ணம் தக்க முயற்சி யெடுத்துக் கொள்வார்களென்று நம்பப்படுகிறது.

நேயர்களே! இவ்வளவு கூறியும் கடைசியில் நாட்டின் பெயரைக் கூறவில்லையே என்று கருதுவீர்கள். இதை வாசிப்போர்களே சுலபமாக அறிந்துகொள்வீர்களென்று நம்பியே நாம் அதைக் கூறாது விடுக்கிறோம்.

ஓம் தத் ஸத்

---

## தாய்ப்பாஷையி னவசியம்.

நண்பர்களே! நமது தாய்ப்பாஷை நமது இகபர சுகங்களிரண்டிற்கும் அத்தியாவசிய மென்பதைப் பற்றியும், அதைக் கட்டாய பாடமாக்காமல் இருப்பதால் நமது சந்ததியார் பெருந் தீங்கிற்குள்ளாவார்களென்றும் பன்முறை பத்திரிகைகளில் முறையிடப்பட்டும், தாய்நாட்டின் நன்மைக் குழைக்கிறோமென்று முன் வந்திருக்கும் நம்மவர்கள் அதைப்பற்றிச் சற்றும் கவலையெடுத்துக்கொள்வதாகத் தெரியவில்லை. ஒருகால் அதன் அவசியம் அவர்களுக்குப் புலப்படவில்லையோ, அல்லது அவர்களும் சிலர் போல் தமிழைப் பற்றி அவசியமே யில்லை, ஆங்கிலந்தான் நாகரீகமும் கௌரவமுமான பாஷை யென்று கருதி யிருக்கிறார்களோ என்ற சந்தேகத்தால் மறுபடி பின் வரும் விஷயங்களை யறிவிக்க விரும்புகிறோம்.

1921ஆ எப்ரல்மீ 23உ வெளியான ஹிந்து பத்திரிகையில் ஸ்ரீமான் C. P. வெங்கட்டராம அய்யர், M.A., L.T., அவர்களால் வரையப்பட்ட வியாசத்தில் இருந்து கீழ்க்கண்டவற்றை வெளியிடுகிறோம்:—

## தமிழ்க் கல்வியின் பிரயோசனம்.

"தாய்ப்பாஷையின் முக்கிய பிரயோசனம் எதுவெனின், அன்னிய பாஷா ஞானம் பெறுவதற்கு ஒரு பலம் பொருந்திய அஸ்திவாரமாக உபயோகப்படுவதேயாகும். தன் தாய்ப்பாஷையில் போதுமான விற்பத்தியின்றி, ஒரு கல்விமான் தன் குழந்தைப் பருவமுதல் தன் வாழ்நாட்களில் நெருக்கமாகச் சம்பந்தப்பட்ட அனேக வஸ்துக்களைப்பற்றித் தெளிவாகச் சம்பாஷிப்பதில், தன் பாஷையை யுபயோகிக்கச் சக்தியுடையவனாக விருக்கமாட்டான். காவியங்களுக் கெல்லாம் இதுவே யுடலும், உயிரும் போன்றது. இந்த ஆரம்பக் கல்வியில் தேர்ச்சி யடையாதவன் உண்மையான கல்வி கற்றவனாகக் கருதப்படமாட்டான். ஆங்கில பாஷா ஞானத்தைச் சரிவரப் பெறுவதற்குத் தாய்ப்பாஷை ஒரு அஸ்திவாரம்போல் உபயோகப்பட வேண்டுமாயின், தாய்ப்பாஷையின் இலக்கணத்தையும், இலக்கியத்தையும் கற்கவேண்டியது கட்டாயம் என்று கூறலாம். ஆங்கிலம் கற்கும் இந்தியன் தன் தாய்ப்பாஷை யிலக்கணத்திலும்,வார்த்தைகளின் உபயோகத்திலும் பயிற்சியடைந்திருக்க வேண்டியது இன்றியமையாத அவசியமாகும். மனப்பயிற்சி யடைவதற்குத் தாய்ப்பாஷையே மிக்கசுலபமான கருவியாகும். எந்தப் பாஷையிலும் விற்பத்தி யடைவதற்கு அப்பாஷையிலுள்ள வார்த்தைகளைத் திருத்தமாக உச்சரிக்கவும், அப்பாஷையிலுள்ள இலக்கணவேறுபாடுகளையும், வார்த்தைகளின் சூசனைகளையும் கற்கவேண்டியது முக்கிய அம்சங்களாகும். முதலாவது, வார்த்தைகளை யுச்சரிப்பதில், உதடு, பல், நாக்கு, சுவாசக்குழல் முதலிய அங்கங்கள் உபயோகமாகின்றன. ஆங்கிலம் முதலிய அன்னிய பாஷைகளைக் கற்பதாயின் புதுமாதிரியான உச்சரிப்புகளில் பழகவேண்டும். இதில் ஒரு பாஷைக்கும், மற்றொரு பாஷைக்கும் எவ்வளவோ வித்தியாச முண்டு. அன்னிய பாஷையைக் கற்கும்போது மாணவன் தன் தாய்ப்பாஷையில் கற்ற உச்சரிப்புகளைவிட வேறு நூதனவிதமான உச்சரிப்புகளில் பழகவேண்டியதாகும். பிள்ளைகள் சுலபமாக உச்சரிப்பில் பழகவேண்டுமாயின் உபாத்தியாயர் தாய்ப்பாஷையின் உச்சரிப்பிற்கும், ஆங்கிலத்தின் உச்சரிப்பிற்கும் இருக்கும் வித்தியாசங்களைப் பிள்ளைகளுக்கு நன்றாய் எடுத்துக் காட்டிப் போதிக்கவேண்டும். ஆகையால் உபாத்தியாயர் மாணவனுடைய தாய்ப்பாஷையில் பயிற்சி யுடையவராக விருந்தால்தான் பிள்ளைகளுக்கு இரண்டு பாஷைகளின் உச்சரிப்புகளையும் ஒத்திட்டுக் காட்டிக் கற்பிக்கமுடியும். ஒரே மாதிரியான எழுத்துகளுக்கு இரண்டு பாஷைகளிலும் உச்சரிப்பில் மிக்க பேதமிருக்கும். அத்தகையவைகளுக்கு உபாத்தியாயர் அந்தந்தப் பாஷையின் உச்சரிப்பை யுண்டாக்க இன்னின்ன கருவி இன்னின்ன நிலையில் நிற்க

வேண்டும், இன்னின்ன விதமா யசையவேண்டும் என்று பிள்ளைகளுக்குத் தமது யூகத்தால் பிரத்தியட்சமாகக் காட்டிப் போதிக்கவேண்டும். திருட்டாந்தமாக ஆங்கிலத்திலுள்ள N. என்ற எழுத்திற்கும் தமிழிலுள்ள ன, ந, ண என்ற எழுத்துகளுக்கும் உச்சரிப்பில் பேதமுண்டு. இப்போது தாய்ப் பாஷையில் இலக்கணமே பாடசாலைகளில் கற்பிப்பதைக் காணோம். தாய்ப் பாஷை பழக்கத்தால் தானே வந்துவிடுமென்று கருதுகிறார்கள் போலும். தாய்ப்பாஷையில் வாசகமாக ஒன்றை எழுதவேண்டியதற்கு இலக்கணம் அவசியம் வேண்டுமென்பதை இவர்கள் கவனிக்கவில்லை. அன்னிய பாஷையின் இலக்கணத்தைச் சரியாகக் கற்கவேண்டுமாயின் தாய்ப்பாஷை யிலக்கணத்தைக் கற்றிருப்பது பெரிய உதவியாகும். ஆங்கில போதனுமுறையில் தேர்ந்தவராகிய எட்ஸ் (Mr. Yates ஆங்கில இலக்கணம் எழுதியவர்) என்பவர் **தாய்ப்பாஷையிலுள்ள இலக்கணத்தை யோட்டியே ஆங்கில இலக்கணம் கற்பிக்கப்படவேண்டும் என்கிறார்.** இந்தியமாணவர்களுக்குச் சாதாரண இங்கிலீஷ் இலக்கணங்கூட பாடசாலைகளில் கற்பிக்கப்படாமலிருப்பது விசனிக்கத்தக்கதா யிருக்கிறதென்று அவர் கூறுகிறார். ஓர் பாஷையைச் சரியாகக் கற்பதற்கும், பாஷா ஞானம் பெறுவதற்கும் இலக்கணம் முக்கியமான உதவியாகும். தாய்ப்பாஷையிலாயினும் சரி, இங்கிலீஷிலாயினும் சரி, வாசகம் (Composition) எழுதவேண்டுமாயின், போதுமான இலக்கணப் பயிற்சியின்றிச் சரியாக எழுதவே முடியாது. ஒருவன் உடையைத் தைக்கக் கற்குமுன் ஊசியை யெப்படிப் பிடிப்பதென்பதைக் கற்றுக்கொள்ள வேண்டும். **இங்கிலீஷ் பாஷையைச் சீர்திருத்தமான முறையில் கற்பிக்கவேண்டுமாயின் தாய்ப்பாஷையும் சமமான சீர்திருத்த முறையில் கற்பிக்கப்பட வேண்டும்.** இந்திய மாணவர்களுக்கு ஆங்கிலம் கற்பிக்கும் உபாத்தியாயன் இங்கிலீஷ்காரனாயினும் சரி, இந்தியனாயினும் சரி, தாய்ப்பாஷையின் அமைப்பை இங்கிலீஷ் பாஷையின் அமைப்போடு ஒத்திட்டுக் காட்டிப் போதிக்கக்கூடிய அளவாவது தாய்ப்பாஷையை அவன் கற்றிருக்க வேண்டுவது அவசியம். (என்று ஸாட்லர் கமிஷன் ரிபோர்ட் பாகம் 2, வாலியும் 5, சாப்டர் 41, பாரா 29-ல் கூறப்பட்டிருக்கிறது.)

ஆங்கிலம் கற்பிக்கும் ஒரு உபாத்தியாயன் ஒரேவார்த்தைக்குள்ள பல பிரதி பதங்களில் ஒன்றுக்கொன்று உபயோகத்திலுள்ள வித்தியாசத்தைக் கற்பிக்கும்போது, தாய்ப்பாஷையில் அத்தகைய கல்விப்பயிற்சி யில்லாத இந்திய மாணவர்களுக்கு அது சற்றும் விளங்குவதே யில்லை.”

நேயர்களே! இதனால் கல்வியிற்சிறந்த அறிவாளிகளெல்லாம் (ஆங்கிலர், இந்தியர் இருவரும்) தாய்ப்பாஷைக் கல்வி இவ்வாறு அலட்சியம் செய்யப்படுவது பலதீங்குகளுக்குக் காரணமாகிறதென்றே கருதுகிறார்க ளென்பது நன்குவிளங்குகிறது. முக்கியமாக, நம்மவர் அவசியமென்று மதித்துக் கற்கும் ஆங்கிலபாஷா ஞானமே நமது மாணவர்க்குச் சரியாய்க் கிடைக்கிறதில்லை

யென்று நிச்சயமாகத்தெரிகிறது. பிரத்யக்ஷ அனுபவத்தாலும் இது உண்மை யென்றே தெரிகிறது. பொதுவாய் இப்போது நமது மக்களுக்குப் பாட சாலைகளில் கற்பிக்கப்படும் கல்வி சோற்றுப் படிப்பே யன்றி உயிர்வாழ்க் கைக்கு உதவக்கூடியதல்ல. ஆன்மாவிற்குப் பயனளிக்கத் தக்கதல்ல. மிருகம் போல் தேகத்தை வளர்க்க மட்டுமே யுபயோகமாகத்தக்கது. வயிற்றிற்காகக் கற்கும் கல்வி அல்லது பணம்சம்பாதிக்க வென்று கற்கும்கல்வி ஒருபோதும் கல்வியாகாது. இப்படி யிருப்பதால், தாய்ப் பாஷாஞானமும் இல்லாவிடின் மேற்கண்டபடி தீங்குநேரிடுவதில் ஐயமேயில்லை என்பது நிச்சயம்.

இதோடு வேறுவிஷயத்தில் இதனாலுண்டாகக் கூடிய பெருங்கேடு அம்மம்ம! பயங்கரமானது. அதென்ன வெனில், நமது மதக்கல்வி நமது பாஷையில்தான் இருக்கிறது. நம் மக்களுக்குப் போதுமான தாய்ப்பாஷைக் கல்வி கற்பிக்கப்படாததால் சுயமத ஆராய்ச்சியே யவர்களுக்குச் சற்றுமில் லாது போகிறது. இக்குறையோடு அன்னியமதம் ஆசாரம் முதலியவைக ளையே போதிக்கும் அன்னியபாஷைப் பாடபுத்தகங்களை இவர்கள் வாசிப்ப தால் உண்மையறியாத சுயமதத்தில் அலட்சியம் தோன்றிவிடுகிறது. கடை சியில் இவர்கள் எம்மதப்பற்றுமின்றி நாஸ்திகர்கள் போலாகி, தெய்வ சிந்தனை யற்றவர்களாகிறார்கள். பாடசாலைகளில் வாசிக்கும் நமது மாணவர் களில் பெரும்பாலர் தெய்வசிந்தனை சற்றுமில்லாதிருப்பதையும் நமது மத சம்பந்தமான ஆசாரஒழுக்கங்களை யலட்சியமாகக் கருதுவதையும் பிரதியட்ச மாகக்காணலாம்.

அந்தோ! இன்னும் நம்மவர் தாய்ப்பாஷையைப் பாடசாலைகளில் கட் டாய பாடமாக்கத் தீவிரமுயற்சி யெடுத்துக் கொள்ளாமலிருப்பது மிக்க விசனிக்கத்தக்க விஷயமே. நமது மதத்திற்கும் நம்சந்ததியாருடைய பிற் கால க்ஷேமத்திற்கும் பெருந்தீங்கை விளைவிக்கக்கூடிய இத்தகைய குறையை நீக்குவதில் அசிரத்தை காட்டினால், நம்நாடு முன்னுக்கு வரவேண்டுமென்று நாம்வாய்ப்பறை யறைவதால் என்னபயனுண்டாகும்? மதாபிமான மில்லா மல் தேசாபிமானம் எப்படி வரும்? நம்மவர் இனியேனும் இதில் கவனத் தைச் செலுத்தவேண்டுமாய் எல்லாம் வல்ல கருணாநிதியைப் பிரார்த்திப்போ மாக.

ஓம் தத் ஸத். தமிழன்.

---

## தமிழர் புராதனம் தமிழின் தொன்மை.

(153-ம் பக்கத் தொடர்ச்சி.)

இனிச் சிலப் பதிகாரம் வேனிற் காதையுள்

"நெடியோன் குன்றமுந் தொடியோன் பௌவமும்"

என்புழி உரையாசிரியர் அடியார்க்கு நல்லார். "அக்காலத்து அவர் நாட்டுத் தென்பாலி முகத்துக்கு வடவெல்லையாகிய பஃறுளி யென்னும்

யாற்றுக்கும் குமரியென்னும் யாற்றுக்கும் இடையே நாற்பத்தொன்பது நாடும் குமரி, கொல்லமுதலிய பன்மலைநாடும்.........கடல்கொண் டொழிதலால் குமரிப்பெளவ மென்ருர்" என்ற கூற்றையும், காடுகாண் காதையில் ஆசிரியர் இளங்கோ வடிகள்,

"வடிவே லெறிந்த வான்பகை பொறாது
பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
குமரிக் கோடுங் கொடுங்கடல் கொள்ள."

என்ற கூற்றையும், வான்மீகி யிராமாயணத்தில் அநுமான் குமரிக் கோட்டினின்றும் நூறுயோசனை தூரங்கடந்து இலங்கையைக் கண்டான் என்ற கூற்றையும் ஆதாரமாகக் கொண்டு தற்போழ்து இந்துமகா சமுத்திரமென்ற பெருங்கடலகத்தில் 'இலெமூரியா' என்ற ஒரு நிலப்பரப் பிருந்ததாகவும், அவணின்றும் தமிழர் இந்நாட்டுக்கு வந்தாரென்றுங் கூறுப. அவ்வணமாயின் அந்நிலப்பரப்பு குமரி முதல் ஆஸ்திரேலியா, ஆப்ரிகா தேயங்கள் வரை பரந்திருத்தல் வேண்டும். அந்நாடு இருந்தது சங்கநூற்களினும் தேற்றமாம். மேலும் 1841-ம் ஆண்டில் வின்வினுட்டி என்னும் (வட அமெரிக்கா) நகரத்திற் கண்டதொரு சிலாசாசனத்தால் இந்தியர் முன்பு அங்கேயிருந்தார்கள் எனப் புலப்படும். இதனுலேயே தமிழர் இலெமூரிய தேயத்தினர் என்று கூறுதலியலாது.

இனித் தமிழர்க்கும் சீனர் (Chinese) க்கும் சம்பந்தம் காட்டுவர். இக்கொள்கைக்குக் காரணம் அவ்விருதிறத்தார் பாஷைகளில் தோற்றும் ஒரு சிறிது ஒற்றுமையே:—

| தமிழ். | சீனம். |
| --- | --- |
| நீ | நீ |
| நான் | ஞான் |
| யாம் | யாம் |
| பெண் | பெண் |
| கண் (இடம்; 7-ம் வேற்றுமையுருபு) | கண் (இடம்) |
| ஈர் (இரண்டு) | ஈர் |
| மை | மை |

அதனுல் தமிழரும் சீனரும் பண்டைக்காலத்தில் ஒரே குலத்தினரென்றும், ஒரே நாட்டில் இருந்தவரென்றுங் கூறுவதற்கு இடனுண்டாகின்றது. மேலும், சீனர்கள் இன்றும் தம்மை வானவரென்றும் மற்றையோரினும் குலத்திலுயர்ந்தவ ரென்றும் கொண்டாடுவார்கள். இஃதனுசரித்தே போலும் தமிழ் மூவேந்தருள் ஒருவனுகிய சேரன்வானவன், வானவரம்பன், இமயவரப்பன் எனப்பெயர் பூண்டான்.

சந்திரகுலத்தரசருள் இருபத்தைந்தாவது வமிசத்தானுகிய உதயணன் கதையில், மகதநாட்டு இராஜதானியாகிய இராசக்கிரக மென்னும் பட்டணத்தின் சிறப்பை உரைக்குமிடத்து ஆசிரியர்,

“ விண்ணுற நிவந்த பண்ணமை படைமதில்
வாயிலு மருங்கினும் காவல் கண்ணி
வேந்து பிழைத் தொழுகினும் காய்ந்து கலக்கருஅ
முழுப்பரி சார முதற்க ணெய்தி
விழுப்பெருஞ் செல்வமொடு வென்றி தாங்கிய
ஐம்பதி னிரட்டி யவனச் சேரியும்
எண்பதி னிரட்டி யெறிபடைப் பாடியும்
மன்பெருஞ் சிறப்பி னுயிரமாகிய
தலைப்பெருஞ் சேனைத் தமிழச் சேனையும்
கொலைப்படுங் கடுந்திறற் கொல்லச் சேரியும்
மிலேச்சச் சேரியும் தலைத்தலை சிறந்து ”

என்பதனுல் அக்காலத்திலே மற்றைச் சாதியாரைப் பார்க்கிலும் தமிழரே மிக்க போர்வீரராகவும் அரசனுடைய பரிவாரங்களில் முதன்மையானவராகவும் இருந்தனர் என்பது தேற்றமாம்.

இதனுல் தமிழர் முதல் முதல் வட இந்தியாவாகிய இந்துஸ்தானத்திலேயே குடியிருந்தனர் என்பது புலப்படும். அவர்களின் பின்பு ஆரியர் இத்தேயத்திற் பெயர்ந்து தமிழரைத் தென்திசையிற் செலுத்தினர். மேனுட்டாருடன் கலன்கொண்டு கடன்மீது வர்த்தகஞ் செய்திருக்கலாம். அதனுலேயே யவர்கள் அத்திசையினின்றும் வந்தனர் என்று கூறலாகாது. கப்பற்கருவிகளுக்குத் தக்க தமிழ்ப் † பதங்களின்மையும், தமிழர் மேற்றேயம் சென்றதற்குச் சான்றின்மையும் வற்புறுத்தும்.

ஆரியர் வருவதற்கு முந்தியே திராவிடரென்று இதுகாறும் வழங்கப்பட்ட தமிழர் இந்நாட்டின்கண் இருந்தபடியால் அவர்கள் வழங்கிய தமிழும் ஆரியத்திற்கு முற்பட்டதாகும்.

வான்மீகி முனிவருளிய இராமாயணத்தின்கண் கிஷ்கிந்தையில் சுக்கிரீவன், சீதாதேவியை நாடிச்செல்லும் வானர வீரர்களுக்கு அவர்ச் செல்லும் நெறியின் திறன் கூறும்போது,

“ தேவரம்பையர்கள் வந்து நீராடுகின்ற திவ்வியமான தெளிந்த நீரையுடைய அழகிய காவேரி நதியை அங்கே காண்பீர்கள்......பின்பு, முதலைகள் நிரம்பிய பெரிய தாமிரபரனி நதியைத் தாண்டுங்கள்...அதைவிட்டு அப்பாற் சென்ருல் முத்தாலும், மணியாலும் அலங்கரிக்கப்பட்ட அழகிய பொன்மயமான பாண்டிய நாட்டினது கபாடமும் (கதவையும்) காண்பீர்.

---

† கலன், நாவாய் முதலிய சொற்கள் கிரேக்க பதங்களின்றும் பெயர்ந்தன. நேவி (Navy) என ஆங்கிலர் மொழிவதுங் காண்க.

கள்" என்று கூறுவான் எனவே, வான்மீகிமுனிவர் காலத்திலேயே தமிழ் நாடாகிய பாண்டியநாடு பீடினும் வளப்பத்தினுஞ் சிறப்புள்ளது; வட நாட்டிலும் பரவி யிருந்தது.

இனி யிக் கபாடபுரம் எவண்இருந்தது? அதன் முறைமை இறையனாரகப் பொருளுரையின்கணல்லது வேறெங்கும் விரிவாகக் கூறப்பட்டிலது. "தலைச்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கமென மூவகைப்பட்ட சங்கம் இரீஇனர் பாண்டியர்கள். அவருள் தலைச்சங்க மிருந்தார்......ஐந்நூற்று நாற்பத்தொன்பதின்மர் என்ப......அவர் நாலாயிரத்து நானூற்று நாற்பதிற்றி யாண்டு சங்க மிருந்தா ரென்ப......அவர் சங்கமிருந்து தமிழாராய்ந்தது கடல் கோள்ளப்பட்ட மதுரை யென்ப. அவர்க்கு நூல் அகத்தியம்.

"இனி இடைச்சங்க மிருந்தார்......ஐம்பத்தொன்பதின்ம ரென்ப... அவர் மூவாயிரத் தெழுநூற்றி யாண்டு சங்கமிருந்தா ரென்ப. அவர் சங்கமிருந்து தமிழாராய்ந்தது கபாடபுரத்து என்ப. அக்காலத்துப் போலும் பாண்டிய நாட்டைக் கடல் கொண்டது."

எனவே, பாண்டியர்கள் முதலின் மதுரையிலும், அது கடல்கொண்ட பின்னர் கபாடபுரத்திலும் சங்கம் இரீஇனர் என்றது தேற்றம். வான்மீகியார் பாண்டிய நாட்டைக் குறிப்பித்திருப்பின், இவ்விடைச் சங்கத்தினரையே குறிக்கவேண்டும். அச்சமயத்திலேயே ஸ்ரீராமனும் அகத்தியனாரைக் கண்படுத் திருத்தல் வேண்டும்.

ஆகவே, வான்மீகியார் தமது காவியத்தைப் பண்ணும்பொழுது, தமிழ் நாட்டில் இரண்டு சங்கங்கள் ஏற்படுத்தப் பெற்றன. முதற் சங்க காலத்தில் உண்டான அகத்தியம் இடைச் சங்கத்தில் அருமையாக உபயோகப்படுத்திய தால் இவ்விரு சங்கங்கட் கிடையே மிக்க காலம் படர்ந்திருத்தல் வேண்டும். ஏனையவும் இதுபோன்றே யுய்த்துணரலாம்.

## VI—முடிவுரை.

'வடிவு பெயர் தன்மை முடிவு நான்கெழுத்தே'

என்ற பிங்கலந்தையின்படி, வடிவெழுத்தும் (Hieroglyphies) பெயர் எழுத்தும் (சீனர்களைப்போன்று ஒவ்வொன்றுக்கும் சந்தேகங்கொண்டு குறிப்பிடுதல்) தன்மை யெழுத்தும் (பண்பைக் குறிக்குமியல்பு) முடிவெழுத்தும் (வினைநிகழ்ச்சி) முறையே தமிழ் பயின்று வந்தது; பெரும்பாலும் ஒவ்வொரு மொழியும் அவ்வணமே யுற்பத்தியாயிற்று. தமது கருத்தைப் பிறர்க்கறிவிக்க முதலில் அப்பொருளின் வடிவை வரைந்து காட்டுதல் மரபு. அதன் பின்பு, ஒவ்வொரு வர்க்கத்திற்கும் தனித்தனி குறிப்பிட்டு வழங்குவர். அதன் பின்பே காலக் கிரமத்தில் அதன் பண்பையும், வினையையும் குறிப்பிப்பர் * அதன்பின்பே தமது உணர்ச்சியையும், மனப்பாங்கையும் உணர்த்த முயல்

* தமிழ்ச் சொற்களின் பகுதிகள் பெரும்பாலும் வினையாகவும் பண்பாகவு மிருத்தல் காண்க.

வர். அம்முயற்சியில் பல வேறு சின்னங்களும், பின்னங்களும் உறுதல் இயல்பாதலின், கற்றுணர்ந்தோர் பரவை வழக்கையும், நூல் வழக்கையும் வகுத்துக் காட்ட முயல்வர். இவ்வணமே யிலக்கணமும் எழுந்தது. "இலக் கியமின்றே விலக்கணமின்று" என்பதும் அதுவே.

பின்னர் நூல்களுள்ளும் வேறுபாடு கண்டு களைவதற்கும் மேலும் அத னைப் பூரண கும்பம் பெறச் செய்வதற்கும் மூதறிவாளர் ஒருங்கு குழீஇ, நல்லனவற்றைக் கொண்டும், அல்லனவற்றை யொழித்தும் வழிபடுத்துவர். அதன் பொருட்டே தமிழ் நாட்டினும் சங்கங்கள் இரீஇயினர். அவர்கள் தமது காலத்தில் இயற்றப்பெற்ற நூல்களில் பெருந்தன்மையும், கண்ணிய மும் உடையனவற்றை யாதரித்தனர். அவ்விதம் ஏற்பட்ட நூல்களே சங்க நூல்கள் எனப்படும்.

தலைச்சங்கம் குழீஇப் பல்லாண்டுகள் கழிந்த பின்னர் மொழியும் ஈன திசையிற் சேர்ந்தது. கடலரையன் நிலமகண்மேற் போர் தொடுத்தனன்; பாண்டியன் முதுநகராய மதுரையும் நீர் நிலை கண்டது; நூல்களும் உடன் அழிந்தன. முதற் சங்கத்தில் ஏற்பட்ட நூல்களில் ஒன்றேனும் இப் பொழுது அகப்பட்டிலது *

பின்னர் ஆண்டுகள் பல செல்லத் தமிழ் மொழியும் (தற்போதிய போல்) காலக்கிரமத்தில் ஈனதிசையுற மீண்டும் அதனை மேம்படுத்த இடைச்சங்கம் குழீஇனர். அவ்வண்ணமே கடைச்சங்கமும் ஏற்பட்டிருத்தல் வேண்டும்.

இனி யிடைச்சங்கத்து நூல்களுள் தொல்காப்பியந் தவிர ஏனைய வொன்றும் முற்றிக் கிடைத்திலது. இவ்விடைச் சங்கமும் முன்னையது போன்று மறையத் தமிழும் முன்போல் இழிவுற்றது. இவ்வண்ணமே பல் வேறு காலத்தில் பல் வேறு சங்கங்கள் குழுவுதலாயின. தற்போதும் மதுரைமா நகரின்கண் ஒன்று பொலிவது காணலாம்.

'சங்கநூற்கள்' என இப்போது போற்றப்படுபவை யனைத்தும் கடைச் சங்கத்தவையேயாம். அவைகளிற் சிறப்புற்றவையும், பல்லோ ரானும் போற்றத்தக்கவையும், எட்டுத் தொகை, பத்துப்பாட்டு, பதினெண் கீழ்க் கணக்குகள் வரையுமன்றிக் களவியல் ‡ "கூத்து, வரியும், பேரிசை யும், சிற்றிசையு மென்றித் தொடக்கத்தன" வுமாம்.

ஒரு தேயத்தின் அறிவும் ஆற்றலும் வன்மையுந் திறனும் அதன் சண வழங்கு மிலக்கியத்தா லுணரலாம். ஒருவன் மனத்தால் உணர்வதை யல் லால் அதன்மேல் அவன் நினைத்தலருமை யென்பது தத்துவ உண்மை

* தலைச்சங்கத்து நூற்களுள் ஒன்றாகிய 'செங்கோன்றரைச் செலவு' என்னும் நூலின் சிலபாக்கள் வெளிவந்துள்ளன.

‡ இறையனாரகப் பொருளுரை முதற் சூத்திரம்.

யன்றே? அதனால் ஒரு நாட்டினர் நினைப்பதுஞ் செய்வதுமே யவர்களியற்றும் நூல்களிற் பிரதிபலிக்கும்.

தமிழ் நூற்களில் ஆராயப்புகின் இதன் உண்மை தேற்றமாகும்; ஆரியர் வருவதற்கு முன்பே, தமிழகத்தில் தமிழ்நர் தமது வழக்க வொழுக்கங்களுடன் அன்புடையா ரென்பும் பிறர்க்குரியா ராதலின்,

"நல்லா றெனினுங் கொளறீது மேலுலகம்
இல்லெனினு மீதலே நன்று"

எனவுணர்ந்து பெண்ணிற் பெருந்தக்கவளுடன் அமிழ்தினு மாற்ற வினிய மக்கட்பேறுற்று அடக்கமும், ஒழுக்கமுங் கூடி, பிறர்பொருள் வெஃகாது, கட்புலான் மறுத்து, இல்லறத்தையோம்பி யிருந்தனர். பிறை நிலமுனியாது கற்று, கேள்விப்புலனும் பெரியார் துணையுங்கொண்டு, குற்றஞ் சிற்றினங் கடிந்து தீவினைவிட்டுப் பொருளீட்டிப் 'பெருமிதமில்லா' 'அற்றமறைக்கும் பெருமை' யுடன் வாழ்ந்தனர். போரின்கண் மன்னர் 'அழியுநர் புறக்கொடை யயில்வே லோச்சாது' அறநெறியே வெற்றித்திறனைப் பூண்டனர். 'மார்பின் எஃகுறு விழுப்புண் பல'* ஏற்றுக்கொள்ள முற்பட்டனர். போர்க்களத்தில் இறந்தார்க்கு நன்மதிகாட்டினர்; நடுகல் நட்டுத் தகுசிறப் போம்பினர். பெண்மக்களும், மனைத்தக்க மாண்புடையராகிக் குலமகளிர்க்குத் தெய்வம் கொழுநரே எனத் தேர்ந்து மங்கல மென்னும் மனைமாட்சி யோம்பி, உடன் 'வருவிருந்து வைகலுமோம்பி' வாழ்ந்தனர். அவர்களும் வீரத்தின் ஆண்மக்கட்குத் தாழ்ந்தவரல்லர்; காதலர் போர்க்களத்தில் இறந்துழித் தாமும் உயிர்துறக்கும் நீர்மையவர்; அவர் வெந் புறங் கண்டு இல்லம் நாடின் 'புகழின்றான் புத்தேளுட்டில்லாதால்' அவரை வாயின் மறுக்குந் தன்மையவர். தவப்பயனுற்றோன்றிய புதல்வனே யாயினும் 'போரிற் பகைவர்க்குடைந்தான்' என்று கேள்வியுறின் அவனை மகனெனவும் பாரார் கொல்லவுந்துணியும் மறுகையுடையவர். பிறவும் விதந்தோதுவது மற்றொன்று விரித்தலாகுமென்று அஞ்சி விடுக்கப்பட்டது.

இவ்வாற்றான் சிறப்புற்றிருந்தார் தமிழர். இப்போதோ! ... தமிழ்மொழி பயிலுவரே நன்குணர்வர் அவர்தம்நிலைமை. முந்திய சிறப்பினையெடுத்தோதுவதே நம்மையும் அந்நிலைக்குய்க்குமென் றெண்ணிப் பலரும் தமிழ்மகளை யேத்துவார்களாக. அவ்வணம் நமது சகோதர சகோதரிகள் பலகாலும் அதனைச் சிந்தித்து வழிபடின் நாம் வரைந்ததன் பயனடைந்தோ மாவோம்.

"பாலும் வாய்வழி வழிதா மரிப்பவர் பலர்போன்
மாலுஞ் சோகமு மவிய நான் வருந்திடத் தகுமோ
வாலும் வாரியுந் துயில்பவன் போய்வர வந்நா
ளோலு மெய்ப்புக ழொடுமிகப் படருமொண் டமிழே"

து. தீனதயாளு.

---

* புறநானூறு - 233. விழுப்புண் - மார்பில் பகைவர் வேலால் உண்டாகும் புண்.

## இந்திய கைத்தொழில்.

கைத்தொழில் என்பது, ஜனங்கள் தாங்கள் உபயோகிக்க வேண்டுங் காரணத்தால் தங்களுக்குத் தேவையானவைகளைத் தங்கள் கைகளால் நிர்மாணிக்கும் தொழிலாம். கடினமானவற்றைச் செய்வதற்கும், கைகளால் காலதாமதத்தில் செய்யக் கூடியவைகளைக் குறைந்த காலத்தில் செய்வதற்கும், அதிகப் பணம் விலையுள்ள பல இயந்திரங்களைக் கொண்டு வேலை செய்தும், தொழிலபிவிருத்தி செய்தும் வருகின்றனர். நம் சௌகர்யத்திற்கு இன்றியமையாதன வாகிய வஸ்துக்களும், நாம் உபயோகிக்கும் பெட்டி, துணி, மணி, காகிதம், பேனா, பென்சல், தீக்குச்சி முதலியயாவும் கைத்தொழில் வல்லுநர் உதவியேயாம். அவரவர் திறமைக்கேற்ப அவை நேர்த்தியாயும், நேர்த்தியின்றியுமிருக்கும். கைத்தொழில் வல்லுநர் குறைந்திருக்கும் பிரதேசங்களில் உள்ளவர்கள், நிறைந்திருக்கும் தேசத்தவர்களிடமிருந்தே அவற்றை வருவித்துக் கொள்ளவேண்டி யிருக்கிறது. நம் தாய்நாடு விளக்கேற்றத் தீக்குச்சி, எண்ணெய் முதல், உடுக்கத் துணி வரை அன்னிய நாட்டை எதிர்பார்த்துக்கொண் டிருக்கிறது. பருத்தி நம்தேயத்திலிருந்து ஏராளமாய் ஏற்றுமதியான போதிலும், நாம் அதிக விலை கொடுத்தே சீமையிலிருந்து வரவழைக்கப்படும் ஆடைகளை உடுத்துகிறோம். ஏதாவது ஒரு காரணம் பற்றி, அந்நாடுகளிலிருந்து நாம் கோரும் பொருள்கள் வரத்தடைப்படுமாயின் நம்பாடு அம்பல மாகும். நடந்த யுத்தத்தால் ஏறிய விலையும், நிகழ்ந்த பஞ்சமும் நீங்கினபாடில்லை என்பது வெள்ளிடை மலையாய்த் தெரிவதே.

ஒருதேசம் முன்னேற்றமடைய வேண்டின் அஃது கைத்தொழிலில் மேம்பட்டதாயிருக்க வேண்டுவது அத்யாவசியம். இங்கிலாந்தின் செல்வத்தையும், இதர மேல்நாடுகளின் நிலைமைகளையும் கவனிக்கின் அவைகளின் கைத்தொழிலே அதற்கு ஆதாரவாய் நிற்கின்றது. ஜப்பான், ஐக்யநாடு முதலியவைகளின் பிரதாபமும் கைத்தொழிலாலே யன்றோ? ஜப்பான் நமக்கு யுத்தகாலத்தில் நெருப்புதவாவிடில் நாம் கஷ்டத்திலன்றோ இருந்திருப்போம். நமது தேசம் கைத்தொழில் குன்றியதற்குக் காரணம் நம் நாட்டு லக்ஷாதிகார பிரபுக்களின் கவனக் குறைவேதான். ஏனெனில், இவர்கள், மேல்நாட்டுப் பிரபுக்களுக்குள்ள ஐக்யம், உழைப்பு, துணிவு, முதலியவைகளைப் பின்பற்றாது, அவர்கள் உடை, நடை, பாஷை, பாவனைகளில் மயங்கி அவற்றைப் பின்பற்றுதலே நாகரீகமென மதித்துத் தங்கள் செல்வத்தை நிதி (பாங்கி)களில் விட்டு அல்லது வட்டிக்குவிட்டு, அல்லது பெரியபங்களா அல்லது நிலங்களிற்காகப்போட்டுச் சேமித்து வருகின்றனர். சிலர் இன்னும் பூமியில்புதைப்பதையும் ஆண்டு வருவார்கள். இவர்கள் மேல்நாட்டு வியாபாரிகளைப்போல் துணிந்து ஒரு பெரும் வியாபாரத்தின்மேல் போட்டால்

ஒருவேளை நஷ்டம் வந்தாலும், வந்துவிடுமென ஊமைக்கனவு கண்டு, "மருண்டவன் கண்ணிற்கு இரண்டதுபே" யெனப் பயந்து கைத்தொழி லபிவிருத்தியைக் குறைத்தனர்.

நம் நாட்டில் வேலை கிடைக்காமல், கூலியின்றி எழ்மைத்தனத்தால் ஜாண் வயிற்றிற்காக நம் சகோதரர்கள் பினங், நேடால் முதலிய அயல்நாடுகளில் அடிமைகளாக விருந்து உழைக்கின்றனர். மின்சார வண்டி அபாதசாலை நீராவியந்திரம் (Railway)போக்குவரவு காரியநிர்வாகங்கள் முதலியவை நம் நாட்டில் இந்திய ஊழியரே செய்தபோதிலும் ஒன்றுக்காவது இந்திய முதலாளி யிருக்கவில்லை. ஏன் துணிந்து அவைகளைத் தாங்கள் எடுக்கலாகாது? ஊதியம் வருமோ,வாராதோ என அஞ்சாமல் துணிந்து முன் வைத்தகாலைப் பின்வாங்காது ஒன்றில் கருத்துடன் உழைக்கின் பலன் அவசியம் வந்தேதீரும். முதல் வைக்கலாகாதெனினும் "முயற்சி தான் மெய்வருத்தக் கூலி தரும்" என்ற தமிழ் வேதாசிரியர் உரையும் "முயற்சியுடையார் இகழ்ச்சி யடையார்" என்ற அனுபவ முதுமொழியையும் ஈசன் பொய்ப்பிக்காது துணை யிருந்து ரக்ஷிப்பார்.

மேல்நாடுகள் சுத்த அநாகரீகமான நிலைமையிலிருந்தபோது நம் நாடு நிலவளம் நீர்வளம் பொலிந்து சகல பாதார்த்தங்களும் மலிந்து செல்வர்கள் செழித்து, சத்வ குணச்சாதுக்கள் சூழ்ந்து பேரின்பவமுதுண்ண கைத்தொழில், நாகரீகம் முதலியவைகளில் மேம்பட்டிருந்தது உலகமே அறியும். நம் புராணசரிதமும் தென்னாட்டு ஆலயங்களும் நம் பூர்வபெருமையை விளக்கி நிற்கின்றன. ஆனதுபற்றி அங்கங்கே பலவித கைத்தொழில் சாலைகள் சுதேச முதலாளிகளின் ஐக்யபாவத்தால் ஏற்பட்டு நமக்கு வேண்டிய சகல பொருள்களும் இங்கேயே செய்யும்படியான தீவிர ஏற்பாடுகள் செய்யப்படவேண்டும்.அஃதின்றி நமது பணம் வீண் பகல் கொள்ளையாகிறதே யென்று கூக்குரலிட்டு, "விதேச சாமான் வாங்காது சுதேச சாமன்களை வாங்குக" என்று வாய்ப்பறைமட்டு மடிப்பதில் பயனடையோம்.

பரிட்சையில் தவரிய மாணவர், பலர் தங்களை இகழுகிறார்களென்று அறியாமையால் தற்கொலை முதலிய செய்ததைக் கேட்டுமோ மன்றோ? படிப்பில் மட்டுமே நல்வாழ்வும் ஏராளமான பொருளீட்டமும் கூடுமென்ற நோக்கம் முற்றிலும் தவறு. நாடு முன்னேறக் கைத்தொழில் வளுக்கவும், தாங்கள் நல் ஊதியம் பெறவும், அடிமையாகாது சுயேச்சையாயிருக்கவும், ஏன் அச்சகோதரர்கள் வீணில் மனமழுங்கி மாளாது, கைத்தொழில் அல்லது வியாபாரத்துறையில் இறங்கி நலவழி யடையலாகாது? இனியாகினும் பரமன் நற்புத்தி அவர்களுக்குக் கொடுக்கலாகாதா? கைத்தொழில் சாலைகள் அளவற்று நியமிக்கப்படின் அயல் நாட்டிலிருந்து துரத்தப்படும் நம் ஏழைச் சகோதரர்கள் உழைத்து நாழியரிசிகொண்டு வயிறு வளர்க்கப் புகலிட மாகுமல்லவா! கைத்தொழில் சாலைவைக்க மூலதனம்

தேவையாகையால் ஏழைக் குடும்பிகள் எக்கைத்தொழில் செய்வது என்று யோசிக்கவேண்டியதில்லை. நம் பூர்வீகர் கையாண்ட "சுதர்சனம்" என்ற சக்கிரத்திற் கொப்பாகிய இராட்டினத்தில் ஊக்கமுடன் வீட்டுவேலைகளைச் செய்து ஒழிந்த நேரத்தில் நூல் நூற்றுத் தினத்திற்குக் குறைந்தது எட்டணு சம்பாதிக்கலாம். கிராமாந்திரங்களில் ஏழைச்சிறுமிகள் நள்ளிருளிலும், விடியற்காலத்திலும், நடுப்பகலிலும், இலுப்பை முதலியமரங்களிடம் சென்று ஒவ்வொன்றுய்க் கொட்டைகளைப்பொறுக்கிச்சிலமணி சாவகாசத்திற்குப் பிறகு ஒருபடி அல்லதுழக்குச் சேர்த்துக் கடையில் போட்டு பணம் சம்பாதிக்க முயலுவதைக் காணலாம். தயவான தர்மவான்கள் அவர்களுக்கு இராட்டினமில்லாவிடில் செய்து கொடுத்தால் அல்லது அதன் தத்துவத்தைக் கற்பித்துக் கொடுத்தால் அவர்கள் வறுமையும் நீங்கும்; கைத்தொழில் மிகின் வியாபாரம் வலுக்கும்; வியாபார வலுவால் செல்வமும் கீர்த்தியும் சேரும். ஆகையால் நம் "ஆனந்தனின்" சந்தாநேய சகோதர சகோதரிகளே!

நம் தாய்நாட்டின் அபிவிருத்தியைக்கோரிச் சதா ஈசனை வேண்டி முயலுங்கள். இந்திய விவசாயம், கைத்தொழில், வியாபாரங்களை அபிவிருத்தி செய்யுங்கள். சர்வாந்தர்யாமியாகிய பரம் பொருள் நல்லருள் பாலிக்க வேண்டுவது நமது பிரார்த்தனை. ஓம் தத் ஸத்.

நா. கிருஷ்ணசாமி ஐயர்,
தலைமை ஆசிரியன், போர்டு பாடசாலை,
குரும்பேரி, திருப்பத்தூர், (வட ஆற்காடு.)

குறிப்பு:—சகோதர சகோதரிகளே! இவ்விஷயத்தை யொவ்வொருவரும் சிரத்தையோடு வாசித்துணர உங்களை வேண்டிக் கொள்ளுகிறேம். மனிதருக்கு வேண்டிய இன்றியமையாத பொருள்கள் இரண்டே. உணவும், ஆடையும். அவற்றிற்கு வேண்டியவைகள் ஏராளமாக நம் நாட்டில் உற்பத்தியாகின்றன. அவ்வாறிருக்க நாம் உணவுக்கு அன்னிய நாட்டை யெதிர்பார்ப்பதும், உடைக்கு மூலவஸ்துவாகிய பஞ்சை நாம் உற்பத்தி செய்து சொல்ப விலைக்கு அந்நிய நாட்டாருக்குக் கொடுத்துவிட்டு, பிறகு அவர்களிடமிருந்து எவ்வளவோ அதிக விலை கொடுத்து உடை வாங்குவதும் எத்தகைய மதிகேடான விஷயம் என்பதைத் தயவுசெய்து சிந்தித்துப் பாருங்கள். எதிர்பாராத காரணத்தால் அந்நிய நாட்டிலிருந்து துணிகள் இங்கு வராவிட்டால் நம் நிலைமை யெவ்வாறுகும் என்பதையும், கடந்த யுத்தத்தால் துணி விஷயத்தில் ஏற்பட்ட கஷ்டத்தையும், விலை யதிகத்தையும் சிந்தித்துப் பாருங்கள். இனியேனும் நமது நாட்டுத் துணிகளை யதிகமாக உற்பத்திசெய்ய முயன்றால் அதனுல் அடையத்தக்க பலன் மிக்க அதிகமென்று நம்புங்கள். தமிழ் வேதத்தை யருளியவரும், பிரம்மாவின் அவதாரமெனக் கருதப்பட்டவருமாகிய நாயனுர் எல்லாத் தொழில்களிலும் பாபமற்றதென் றெண்ணித் தாமே செய்துவந்த நெசவுத் தொழிலை இழிவென்று

கருதுவோர் அம்மகானைப் பழிக்கும் அறிவிலிகளே யாவர். இத்தொழில் என்றும் நிலையா யிருக்கத்தக்கது; ஆண், பெண் அனைவரும் கஷ்டமின்றி வீட்டில் உட்கார்ந்தபடி செய்யக்கூடியது. தென்னாட்டில் சிலவிடங்களில் இத்தொழிலைச் சிரத்தையோடு ஆரம்பித்திருப்பதாகத் தெரிகிறது. இது புகழ்ச்சிக் குரியதாகும். நம் நாட்டில் மற்ற விடங்களிலு முள்ளோர் இதில் சிரத்தை யெடுத்துக் கொண்டால்தான் நம் நாடு இனியேனும் முன்னுக்கு வந்து தரித்திரமும், கஷ்டமும் குறையும். ஆண்டவனருள் புரிவாராக.

பத்திரிகாசிரியர்.

---

## கைவல்ய நவநீத வசனம்.

(149-ம் பக்கத் தொடர்ச்சி.)

### (குரு முக்கியானந்தத்தின் பெருமை கூறல்.)

"இரண்டற்றதும் சுழுத்தி யல்லாததுமாகிய முக்கிய நிஜானந்தத்தி னனுபவமே துரியாதீதம் என்ற ஏழாம் பூமியாம். எவன் இந்த ஏழாம் பூமியில் இருக்கிறானோ அவன் நாரதன், சிவன், விஷ்ணு, பிரமன் முதலியோருடைய அனுபவமான ஆனந்த நிலையி லிருப்பவனவன். அவர்களை யவனுக்கு உவமானமாகக் கூறலாம். அத்தகைய மகாபுருடனது பாததூளிகள் என் சிரசில் தரிக்கத் தக்கனவாம்.

இவ்வாறு ஆனந்தங்களின் வகைகளைக் கூறினோம். இன்னும் வித்தியானந்தம் என்ற ஒன்றுண்டு; அதை முடிவிற் கூறுவோம். சுகதுக்காதி தொந்தங்களைப் போக்கிய மைந்தனே! இன்னும் சந்தேகங்க ளுளவேல் கேட்பாயாக.

சீடன்:—குருநாதனே! ஆன்மா சச்சிதானந்த சொரூபமென்று முன்னம் கூறி யருளினீர்களே. சத்து, சித்து, ஆனந்தம் என்ற மூன்று பதங்களும் தனித்தனி வெவ்வேறு பொருளுடையனவாக விருக்கின்றனவே. (அஸ்தம், கரம், பாணி என்பவைபோல்) ஒரே வஸ்துவின் பரியாய நாமங்களாக விருக்கவில்லையே. அப்படி யிருக்க சஞ்சலப்படும் மனமானது ஏகசொரூபமான அநுபவத்தில் எவ்வாறு நிலைத்து நிற்கும்? ஆகையால், தேனீக்கள் பல மலர்களினின்றெடுத்த தேன் (ஏகரசமாக விருப்பது) போல், அதை அடியேனுக்கு அறிவிக்க வேண்டுகிறேன்.

ஆசான்:—மைந்தனே! ஜலத்தினிடத்தில் குளிர்ச்சி, நெகிழ்ச்சி, வெண்மை என்ற மூன்று குணங்க ளிருக்கின்றன வென்பதனாலேயே ஜலம் மூன்று பொருள்களாயினதோ? இல்லை. உஷ்ணம், பிரகாசம், சிவப்பு என்ற மூன்று குணங்களுள வென்பதனால் அக்கினியும் மூன்று பொருள்களாய் விட்டதோ? இல்லை. பிரபஞ்சம், அசத்து, சடம், துக்கம் என்று நன்கறியும் பொருட்டு பிரம்மத்தினிடத்தில் அவற்

திற்கு மாறான சத்து, சித்து, ஆனந்தம் என்ற மூன்று குணங்களுண்டென்று வேதம் அறிவித்ததே யன்றி, சச்சிதானந்த சொரூபமாகிய பிரம்மம் ஒன்றே யாகும்.

பிரம்மத்திற்கு நித்தியம், பூரணம், ஏகம், பரமார்த்தம், பரப்பிரம்மம், நிதானம், சாந்தம், சத்தியம், கேவலம், துரியம், சமம், திருக்கு, கூடஸ்தன், சாக்ஷி, போதம், சுத்தம், இலக்கியம், சநாதனம், சிவன், தத்துவம், விண், சோதி, ஆன்மா, முத்தம், விபு, சூக்குமம் என்ற அனேகம் விதி நாமங்களையும், அசலம், நிரஞ்சனம், அமிர்தம், அப்பிரமேயம், விமலம், வசனாதீதம், அசடம், அநாமயம், அசங்கம், அதுலம், நிரந்தரம், அகோசரம், அகண்டம், அசம், அநந்தம், அவிநாசி, நிர்க்குணம், நிட்களம், நிரவயவம், அநாதி, அசரீரம், அவிகாரம், அத்துவிதம் என்ற அனேகம் நிஷேத நாமங்களையும் வேதம் கூறா நிற்கும்.

இவ்வாறு அனேக விதி நிடேத குணங்கள் யாவும் சேர்ந்து ஒருமித்து வேதம் சொன்ன பொருள் ஒன்றேயன்றி இரண்டல்ல. அகண்டைகாசமான பிரம்மத்தைப் பிரதிபாதியா நின்ற பதங்கள் பின்னமான சத்தங்களாயினும், சத்து, சித்து, ஆனந்த மென்னும் விசேடணங்களை யுடைய பிரம்மம் ஏகசொரூபமே என்ற உண்மையை யுணர்ந்து அகண்ட பரிபூரண சொரூபமாக விருப்பாய், மைந்தனே.

(சீடனுக் குதிக்கக்கூடிய சங்கையைக் குரு தாமே கூறி அதற்குச் சமாதான முறைக்கிறார்.)

மைந்தனே! நிர்க்குணம் என்று கூறிய பிரம்மத்திற்கு வேதம் குணங்களைக் கூறுவது 'என் தாய் மலடி' என்பதுபோல் வியாகாதம் (முன்னுக்குப் பின் விரோதமான வார்த்தை) ஆகாதோ என்று சங்கிக்காதே. பிரம்மத்தினுடைய குணங்களைக் கற்பித்துக் கூறாமல் அதை யறியத்தக்க சாமார்த்தியமுடைய அறிவாளிகள் யாரிருக்கிறார்கள்? ஒருவருமில்லை. சீவன்கள் முத்திசுக மடையும்பொருட்டு அவர்களுக்குப் பிரம்ம ஞானம் உதிப்பதற்காகக் கற்பிக்கப்பட்ட குணங்கள் பிரம்மத்தின் குணங்களல்ல; பிரம்மமாகிய சொரூபமே யாகும்.

(சீடன் சந்தேகம் பூரணமாய் நிவர்த்தி யாவதற்காகப் பின்னும் வினாதல்.)

சீடன்:—அஞ்ஞான இருள் நீங்கக் கோடி சூரியர்கள் உதித்ததுபோல் எழுந்தருளிய ஆசாரியரே! ஏக பரிபூரணமாகிய எனது சொரூபவநுபூதி என் உள்ளத்தில் அழுந்தும்படியாகச் சுருதிகள் கூறியவாறு என்னை யகண்டாகார சொரூபமாகக் கண்டேன். உத்தியும் எனக்குப் பொருந்தும்படியாக வருளிச் செய்தால் பசுமரத் தாணிபோல் என் நெஞ்சில் அழுந்து மல்லவோ.

ஆசான்:—மைந்தனே! சத்தாக எப்பொருள் உளதோ அதுவே சித்தாகப் பிரகாசித்துக்கொண் டிருக்கிறது. அப்படிக்கின்றி சத்தினின்றும் அது வேறெனில், அச்சித்தாகிய பொருள் சடமாகும். அப்படி அசத்தாயின் அது எவ்வாறு சாட்சியாக விருக்கலாகும்? ஆகையால் சத்தே சித்தென் றறியவேண்டும்.

பிரகாசித்துக்கொண் டிருக்கிற சித்தே சத்தாக இருந்துகொண் டிருக்கிறது. அச்சித்திற்குப் பிரகாசிக்கும் தன்மை யின்றேல் அது சடமாகும்; சடபதார்த்தங்களுக்கு இருப்பே யில்லை. ஆதலின், சித்தே சத்தென் றறிய வேண்டும். இவ்வாறு சத்தும், சித்தும் ஏகமாய்த் தோன்றுவ தெதுவோ அதுவே ஆனந்தமாம். அப்படிக்கின்றி சத்தாகிய சித்துக்கு ஆனந்தமாகிய அது அன்னியமாயின், அது அசத்தும் ஜடமுமாகும். அப்போது ஆனந் தானுபவம் உதியாது. ஆகையால் சத்தும், சித்துமே ஆனந்தமென அறிய வேண்டும். இதனுல் சத்து, சித்து, ஆனந்தமே சொரூபமாகிய பிரம்மம் ஏகமே என்று யூகிப்பதற்கு இவ்வுத்தியே தலைமையானதாகும்.

மேலும் சத்து தன்னுலேயே பிரகாசிக்கிறதன்றி வேருென்ருலல்ல. வேருென்ரு லெனின், அந்த வேருென்று சத்தா அசத்தா வென்றும் கேள்வி வரும். அசத்தென்ருல், அசத்து சத்தை விளங்கச் செய்யாது. அப்படிக்கின்றி அதுவும் சத்தெனில் மறபடி யது தன்னுல் பிரகாசிக்கின் றதோ வேருென்ருலோ வென்று கேள்வி தோன்றி வேருென்றன் றனில் இவ்வாறே முடிவில்லாது போய்க்கொண்டே யிருக்கும். ஆதலின் சத்தே சித்து, சத்து சித்தே ஆனந்தம். இப்படி சச்சிதானந்த சொரூபமாய் விளங்கானின்ற பிரம்மம் ஏகவஸ்துவே.

இவ்வாறு சச்சிதானந்தங்கள் வேறுபடாமல் ஏகமாக விருக்கிற தன்மை ச்ருதி யுக்திகளுக்கு ஒத்திருப்பதுபோல், அநுபவமும் ஒத்திருப்பதைக் கூறுதும் கேட்பாயாக. உனது சுழுத்தியின்கண் அனுபவித்த ஆனந்தமானது (அங்கே அஞ்ஞானத்தைப் பிரகாசிப்பித்துக் கொண்டிருந்து) விழித்தபின் (நான் ஒன்று மறியாமல் சுகமாக நித்திரை செய்தேன் என்று) ஸ்மிருதிரூப மாக உதித்தலால் அவ்வானந்தமே அறிவாம். (ஸ்மிருதி ரூபமாக உதித்தது எனின், அநுபவிக்கும்போது தோன்ருமல் பிறகு நினைவு வந்து அறியப் படுவது)அதாவது சித்தாம். அச்சுழுத்தியின்கண் அந்த ஆனந்தத்தைத் தவிர விளக்கிவைக்க வேறு பிரகாசமில்லை. சுழுத்தி, பிரளயம் இரண்டிலும் சிதானந்தனுகிய நீ யிருந்தே அஞ்ஞானமாகிய இருளைக் காண்கிருய். ஆதலின் நீ சச்சிதானந்த சொரூபனே. சச்சிதானந்த சொரூபமே பிரம்மம் என்று சுருதி கூறுவதால் நீ பிரம்ம சொரூபமே. பிரம்மம் என்ருல் எங்கும் வியாபகமானது என்று பொருள்.

சுழுத்தியில் எவ்வாறு காண்கிருயோ அவ்வாறே விழிப்பி லிருக்கும் போதும், எப்போதும், உன் உள்ளத்தில் அவ்வாறே நோக்கி அகண்ட பரிபூரண அனுபவத்தி லிருப்பாயாக.

சகல ஞான நூல்களையு முணர்ந்த அனுபவியாகிய ஆசான் சச்சிதானந்தங்கள் ஒன்ருகிய பரமார்த்த நிலையை மொழிந்தபடி சீடன் தன் அநுபவத்தை விடாமல் பலகாலும் நிஷ்டைகூடிச் சமாதியிலிருந்தான். பிறகு சமாதியினின்றும் விழித்தபோது, அநேகவித ரூபங்களான சராசரங்களாகிய சித்திரங்களனைத்தும் தோன்றும் அகண்ட சச்சிதானந்தப் பிரம்மமாகிய ஒருபடம்போ லானுன்.

கடலில் அலை திவலை நுரையாதிகள் தோன்றிக் காணப்படுவது போல அகண்டபரிபூரண சச்சிதானந்தப் பிரம்மத்தின்கண் இச்சராசரப் பிரபஞ்சங்களெல்லாம் ஆரோபமாய்த் தோன்றி யிருப்பதால் பிரபஞ்சங்களைச் சித்திரங்களாகவும், ஆதார மாகிய பிரம்மத்தைப் படம் என்றும் கூறினுர்; இதையே அகண்டாகார அனுபவமென்பர். இதுவே சீவன் முக்தனது அனுபவ நிலை.

சுழுத்தியில் அறிவு அவித்தையாகிய அஞ்ஞான இருளை யெதிரிட்டறிகிறது. நித்திரையற்ற சாக்கிர நிலையில் மனதை யொடுக்கி அவ்வாறு அறிவுமயமாய் விளங்குவதே சீவன் முக்தி நிலையாம்.

“கண்ட அறிவுதனைக் கொண்டுன்னைக் கண்மறைத்த
பண்டை யிருளைநீ பார்த்துக்கா ணென்ருனே.”

(தத்துவராயர் தாலாட்டு.)

இதற்கே நினைவிற் சுழுத்தி என்றும் பெயர். தன் அனுபவநிலையாகிய இந்நிலையில் நின்ருல் எல்லாம் அகண்ட பிரம்ம சொரூபமாய் விளங்கும்.

“தன் மயமாய் நின்றநிலை தானேதா னுகிநின்ருல்
நின்மயமா யாவும் நிகழும் பராபரமே.” (தாயுமானவர்.)

“மேனியிற் புறத்தி னுள்ளின் மேலொடு கீழிற் றிக்கில்
வானில்வை யகத்தி லெங்கும் யானன்றி மற்ருென் றில்லை
யானிலா விடமு மில்லை யெனதிடத் திலாது மில்லை
தானிகழ் பொருள்வே றில்லை சச்சிதா நந்த மென்ருன்.”

(வாசிட்டம் - கசன் கதை.)

உயிரசைவாலே தான் மனமசைகிறது. ஆன்மாவையன்றி மனம் அசையமுடியாது. மனம்ஜடம். ஆன்மா உற்று நோக்கினுல் அந்த உண்மை வெளிப்படும். ஆன்மா தன்னை மறவாது தன் நிலையில் நின்று மனம் எங்கே யென்று நோக்கினுல் மனதிற்குத் தன்னையன்றி வேறு இருப்பிட மில்லை யென்பதும், இதையே மாயை யென்பது உண்மையென்றும் தெளிவாக விளங்கும். இம்மனதின் அசைவை ஊர விடாதடக்கிச் சுழுத்தியில் அது எப்

படி ஒடுங்கிச் சாட்டை யற்ற பம்பரம்போலும், கயிறற்றக் காற்றாடிபோலும் கிடந்ததோ, அவ்வாறு நிலையில் சுழுத்தியற்ற சாக்கிரத்திலேயே அதை யிருக்கும்படி செய்யின் ஆன்மப்பிரகாசம் தோன்றும். ஞானோதயமுண்டாம்.

"உண்டாகி யெவ்விடத்து முற்ற போத
முயிரசைவா லுணர்வுறுமப் போதந் தன்னை
மண்டாமற் றடுக்கைபெரு நன்மை யாகும்
வளர்போதங் காண்பவற்றை மருவு மாலாற்
றண்டாத காண்பவையே மனத்திற் கென்றுந்
தவிராத துயராமத் தனிப்போ தந்தான்
மிண்டாத சுழுத்தியிற்போ தம்போ னிற்கில்
வீடதுபே றதுவிமல பதம்வே றில்லை" (வாசிட்டம்)

(தொடரும்.)

சீடன்.

---

## மாணவர்களுக்குச் சில போதனைகள்

(140-ம் பக்கத் தொடர்ச்சி.)

12. சுயமுயற்சி.—சகோதரர்களே! கல்வி கற்கும்போது சாதாரண மாக உபாத்தியாயரே நமக்குக் கல்வியை யளிக்கிறார் என்று கருதுகிறோம். உபாத்தியாயர் தாம் கற்றகல்வியில் நமக்குக் கொஞ்சம் பகிர்ந்து கொடுப்ப தில்லை. கல்வியாலுண்டாகும் அறிவின் வல்லமை வெளியிலிருந்து வருவ தில்லை. அது நமக் குள்ளிருந்தே வெளிப்படுகிறது. உபாத்தியாயர் வழி காட்டி யாகமட்டுமே யிருக்கிறார். ஆகையால் நமது முயற்சியாலேயே நாம் விசேஷ ஞானத்தையடைய வேண்டும். சிலபிள்ளைகள் தாங்கள் பரீட்சை யில் தேறாவிட்டால் உபாத்தியாயர் சரியாய்க் கற்றுக்கொடுக்கவில்லை யென் கிறார்கள். இதைப்பலர் நம்பிக்கொள்கின்றனர். அதே யுபாத்தியாயரிடம் வாசித்த மற்றபிள்ளைகள் தேறியிருப்பதே அப்படிக் கூறுவது தவறு என்ப தைக் காட்டுகிறது. ஆன்ம ஞானமே நமக்குள்ளிருந்து முடிவில் நமக்கு நாமே யதை யடைகிறோமே யன்றி ஞானகுருவினிட மிருந்து அதைப் பெறுவதில்லை. அவர் சீடர்களில் அவனவன் தரத்திற்குத் தக்கபடி வழி காட்டுகிறாரே யன்றி வேறில்லை. ஆகையால், அபாரமான சக்திகளைப் பெறு வது நமது மனோ முயற்சியைப் பொறுத்ததாகவே யிருக்கிறது. உபாத்தி யாயர் பத்து நிமிடம் வழிகாட்டினால் நாம் நூறு நிமிடம் அவ்வழியில் உழைக்க வேண்டும். மனோவல்லமையோடு உழைப்பவன் உபாத்தியாயரின் உதவியை மிகச் சொல்பமாகவே எதிர் பார்ப்பான். இதை நிரூபிக்க ஒரு சிறு சங்கதி பாரதத்தி லுள்ளதைக் கூறுகிறோம்:—

"ஏகலவன் என்ற ஒரு வேடன் பாண்டவராதியருடைய தநுர் ஆசாரிய ராகிய துரோணரை வணங்கித் தனக்கு வில்வித்தை கற்பிக்கும்படி வேண்டி னான். துரோணர் அரசகுமாரர்களுக்கன்றி வேடனாகிய உனக்குக் கற்பி யோம் என்றனர். ஏகலவன் அவரையே தன் குருவாக எண்ணிவிட்டா னாதலின் " இது தமது கட்டளையாயின் குரு வாக்குக்கு மறுவாக்கில்லை. அவ்வாறே யாகுக" என்று சென்றனன்.

பிறகு துரோணாசாரியர் தமது சீடர்களில் அர்ச்சுனனே மிக்க புத்தி சாலித் தனமாகத் தாம் கற்பிக்கும் வித்தைகளைக் கிரகித்துக் கொள்வதன்றி

தானே விர்த்தியும் செய்துகொள்வதைக் கண்டு அவன்மேல் சந்தோஷங் கொண்டு, ஒரு மிருகத்தின் தலைப்புறம் அல்லது வாற்புறம், ஒருபுறம் அம் பெய்தால் மறுபுறம் வரை அம்மிருகம் இரண்டாகப் பிளந்து போகத்தக்க ஒரு அரியவித்தையை யர்ச்சுனனுக்குக் கற்பித்துக் கொடுத்து, "இதை யுனக்கே போதித்திருக்கிறேன், வேறெவருக்கும் கற்பித்திலன்" என்று கூறினார்.

இவ்வாறிருக்க, ஒருநாள் வனவேட்டைக்குச் சென்ற பார்க்குனன் ஒருவேடன் ஒரு காட்டுப்பன்றியின் நெற்றியில் அம்பெய்து அப்பன்றிவால் வரை இரண்டாகப் பிளவுபட்டு விழுமாறு செய்ததைக் கண்டு அவ்வேடனை நோக்கி "ஏ புளிஞனே! நின்பெயர்யாது? பெறற்கரிய இப்பெரியவித் தையைப் புகன்ற நின்குரு யார்? புகலுதி" எனலும், வேடன், "அய்ய! அடி யேன் பெயர் ஏகலவன் என்ப; என் வில்லாசிரியர் துரோணாசாரிய ராகும்" என்றனன்.

இம்மொழிகளைக் கேட்ட கிரீடி, "ஏ! நமது விப்பிர ஆசிரியரின் செய்கை நன்று நன்று; நினக்கன்றி மற்றியாருக்கும் இவ்வரிய வித்தையைக் கற்பித்திலன் என்று நம்பாற் புகன்று இவ்வெகினனுக்கும் அவ்வித்தையைக் கற்பித்திருக்கின்றனரே" என்று உளம்பொருனைத் தன் ஆசாரியரைக் கண்டு வினவினன். ஆசாரியர் வியப்புற்று "உண்மையில் நான் அவனுக்கு வில்வித்தை கற்பித்ததே யில்லை. இதில் ஏதோ விசேட மிருத்தல் வேண் டும். வா, நேரில் அவனைக் கண்டு கேட்போம்" என்றியம்பிக் கொண்டே காண்டீபனை யழைத்துக்கொண்டு ஏகலவனிடம் சென்று விசாரித்தார். ஏகலவன் குருவுக்குத் தக்கபடி பூசைசெய்து தன் குடிசையில் ஒரு மூலையி லுள்ள மாப்பதுமையைக் காட்டி,

"சுவாமி! தாங்கள் எனக்கு வில்வித்தை கற்பிக்க மறுத்து விட்டபின், அடியேன் தங்களுக்குப் பதில் இவ்வுருவை யமைத்து இதையே தாங்க ளாகப் பாவித்து வித்தையைக் கற்றுக்கொண்டேன். தங்கள் கருணையால் அடியேன் அந்த அரியவித்தையையும் அடைந்தேன்" என்றான்.

பிறகு துரோணாசாரியர் விஜயனை நோக்கி "அர்ச்சுனா! இவன் குரு பக்தியாலும் மனோவல்லமையாலும் வில்வித்தையைக் கற்றுக்கொண்டான்; இந்த இரண்டு குணங்களுமுடையோர்க்கு எதுதான் கைக்கூடாது?" என்றார்.

அதிசயிக்கத்தக்க அரிய விஷயங்களைக் கண்டு பிடித்தோர்க்கெல்லாம் அவ்வல்லமை யவர்கள் மனதினின்றும் உதித்ததேயன்றி வேறில்லை. சுய முயற்சியால் தமக்குள் இருக்கும் அபாரசக்தியை யவர்கள் கைக்கொண் டார்கள்.

ஜேம்ஸ் வாட்ஸன், தேயிலைநீர் அடுப்பில் கொதிக்கிறதைப் பார்த்தார். அத்தகைய சம்பவத்தை எத்தனைபேர் எண்ணிறந்த முறை கண்ணுற்றிருந் தனர்; அவர்கள் மனதில் ஏன் அதைப்பற்றி ஒரு விசேடமு முதிக்கவில்லை? வாட்ஸனுக்கு நீராவியின் வல்லமையைப் பற்றி யாரேனும் போதித்திருந் தார்களா? இல்லை. அவர், அறிவாகிய பாதாள கொலுசை ஊக்கமாகிய கரத்தில் பற்றி அசைவற்று நிற்கும் தமது மனமாகிய கிணற்றில் விட்டுத் துழவிப்பார்த்தார். அந்த ஆழத்திலிருந்தே நீராவிக்கு வல்லமையிருக்கிற

தென்பதும், அதைக்கொண்டு அனேக அரியகாரியங்களைச் செய்யலாம் என்பதுமாகிய ஞானம் அவருக்குக் கிடைத்தது. பிரசித்திபெற்ற ஒவ்வொருவரிடம் காணப்பட்ட ஒவ்வொருவித அபாரசக்தியும், அவரவர் மனமாகிய பொக்கிஷத்திலிருந்து அவரவர்களுக்கு அகப்பட்டதே யன்றி வெளியிலிருந்து வருவது ஒன்றுமேயில்லை. [இன்னும் இதிலுள்ள உண்மை என்னவெனில் மனம் பிறந்தவிடத்திலிருந்தே இவை யாவும் உண்டாயின; அதாவது,ஆன்மாவினிடத்திலிருந்தே எல்லாச்சக்திகளும் உண்டாகின்றன. அது தவிர மற்றயாவும் சடமே. வேறு எதற்கும் ஒரு சக்தியுமில்லை. ஆன்ம சக்தியே யாவற்றையும் இயக்குகிறது. நாம் அதைக் கவனித் துணராதிருப்பதால் மனம் செய்கிறதென்கிறோம். இருக்கட்டும், உங்களுக்கு இதைப்பற்றி விவரிக்கக் காலமும் இடமும் இதுவல்ல; ஆகையால் இப்போது நாம் மனம் வரையிலேயே நிற்போம்.]

நண்பர்களே! இதற்கு மனோசக்தி யென்று பெயர்; இம்மனோசக்தியை எந்த அளவு ஒருவன் அடைகிறானோ அந்த அளவிற்கு அவனுக்கு அபார சக்திகளும் விளங்கும்.

13. மனோசக்தி என்றால் நமது மனதிலுள்ள சக்தியென்றுபொருள் என்பது மேலே விவரித்தவற்றால் நன்குவிளங்கும். இம்மனோசக்தி அபாரமானது; அளவற்றது. நமது முன்னோர் இதை யனுபவமாயுணர்ந்து இதைப் பற்றி அனேக நூல்களை வரைந்திருக்கிறார்கள். இதன் சக்தியை உத்தமம், மத்திமம், அதமம்என்ற மூன்றுநிலைகளாகப் பிறிக்கலாம். அதமநிலை:—மனம் நித்திரையிலிருப்பது போல் மனச்சாட்சிகூட தோன்றாமல் சுத்தமூடமான மந்தநிலையி லிருத்தல். மத்திமநிலை:—மனச்சாட்சியோடு சாக்கிரத்தி லிருக்கும் நிலை; இதில்தான் அதன் அலையும் தொழில் நடப்பது; இதில் அதன் சக்தி பலவிதங்களில் சிதறுண்டு தொழில் செய்கிறது; இதில் இந்திரியங்களோடு கலந்து தொழில் செய்கிறது. இதற்கு மேலுள்ளதுதான் உத்தம நிலை: அது மனச்சாட்சிக்கு மேற்பட்டநிலை; (Super-Conscious State) ஆனால் அங்குதான் மனதின் பூரணவல்லமை பிரகாசிக்கிறது; இதுவே யோகிகளின்நிலை. நமது முன்னோர் இதையடைந்தே திரிகால வர்த்தமானங்களையு முணர்ந்து, அரிய அட்டமாசித்திகளைப் பெற்று அபாரமான காரியங்களைச் செய்தார்கள். உலகில் வேறெந்த நாட்டாரும் இத்தகைய சாத்திரங்களை வெளியிடவில்லை. சகோதரர்களே! இத்தகைய முன்னோரின் ஆசாரங்களைப் பின்பற்றுவதில் அன்பும் சிரத்தையும் கொள்ளுங்கள். வெளிப்பகட்டுக்கு மயங்கி அன்னிய ஆசாரங்களைக் கைக்கொள்ளாதீர்கள்.

மனிதனுக்குள் இருக்கும் மனோ சக்தியை யொருவாறு நீங்கள் உணர்வதன் பொருட்டே மிக்க சுருக்கமாக மேற்கண்ட விஷயத்தை விவரித்தோம். இனி இப்போது நீங்கள் கவனிக்க வேண்டியது மனதின் மத்திய நிலையே.

இந்த மனோ சக்தியை நீங்கள் பெறுவதற்கு எவ்வளவு முயற்சி யெடுத்துக் கொள்கிறீர்களோ அதற்குத் தக்க பலனை யடைவீர்க ளென்பது சத்தியம். மாணவர்களாகிய உங்களுக்கு இரண்டு சக்தி அவசியம் வேண்டும். அவை போதுமான அளவில்லா விட்டால் கல்வியில் நீங்கள் சித்திபெற மாட்டீர்கள். அச்சக்திகள் எவை யெனின்,

(1) கிராக்கியசக்தி.—அதாவது, உபாத்தியாயர் ஒருமுறை கூறியதை யுடனே யப்படியே மனதில் பதிய வைத்துக் கொள்ளுதல். (Power of Understanding or Absorption.)

(2) கியாபகசக்தி.—கேட்டதை அல்லது வாசித்ததை மறவாதிருந்து விரும்பியபோது வெளிக்குக்கொண்டு வருதல். மனப்பாடம் செய்தலுக்கு இது அவசியம் வேண்டும். (Power of Remembrance.)

இந்த இரண்டு சக்திகளே உங்கள் கல்விக்கு அத்தியாவசியம் வேண்டும். நீங்கள் மனோசக்தியை யடைய முயன்றால் முதலாவது, இச்சக்திகளைச் சுலபமாக விர்த்திசெய்து கொள்ளலாம். அதற்குமேல் மனோசக்தியை யெவ்வளவு அதிகமாக அடைகிறீர்களோ அதற்குத் தக்கபடி அரிய சக்திகள் உங்களிடம் விளங்கும். நீங்கள் வாசிக்கும் நூல்களில் மற்ற பேர்களுக்கு விளங்காத விசேஷ பொருள்கள் உங்களுக்கு விளங்கத் தொடங்கும்.

ஒரு கவி அல்லது இலக்கணச் சூத்திரம் முதலியவற்றை மனப்பாடம் செய்ய மற்றபேர் பத்துமுறை வாசித்தால் நீங்கள் இரண்டொரு முறைகளில் மனதில் பதியச் செய்துகொள்ளச் சக்தி யுடையவர்க ளாவீர்கள். ஒரு பாவை ஒருமுறை வாசித்த மட்டில் அப்படியே மனதில் பதியச் செய்து கொள்ளும் சக்தியுடையோர் நம் நாட்டி லிருந்திருக்கிறார்கள் என்று தெரிகிறது. இவர்கள் எந்த நூலையாயினும் சரி ஒருமுறை வாசித்த மட்டில் மனப்பாடமாக்கிக் கொள்வார்கள். இவர்களுக்கு ஏக சந்தக் கிராகிகள் என்று பெயர். இரண்டு முறைகளில் மனப்பாடம் செய்ய வல்லோர்க்கு துவி சந்தக் கிராகிகளென்றும், மூன்று முறைகளில் பாடம் செய்ய வல்லோர்க்குத் திரி சந்தக் கிராகிக ளென்றும் பெயர். இதைப்பற்றி கர்ண பரம்பரையான ஒரு சரித்திர முண்டு. அதாவது, "முன்பு மதுரையிலிருந்த கடைச்சங்கத்தில் ஏகசந்தக் கிராகி, துவிசந்தக் கிராகி, திரிசந்தக் கிராகி ஆகிய மூவர் இருந்தார்கள். புதிதாக ஒரு வித்வான் வந்து கவி பாடி இவர்களை வென்று விடுவதாயின், ஏகசந்தக்கிராகி அவன்கூறிய கவிகளை யுடனே யெழுதி அந்த ஏடுகளை மக்கின பழைய ஓலைகள்போல் செய்துவிடச் சங்க வித்வான்கள் 'ஓகோ இக்கவிகள் சங்கத்திலிருந்த பழைய கவிகளே' என்று கூறி எழுதியதை யத்தாட்சி காட்டி வந்த வித்வான் வெட்கி மனம் நொந்து செல்லும்படி செய்துகொண் டிருந்தார்கள். இந்த அக்கிரமத்தைக் கேள்வியுற்ற ஔவை சங்கப் புலவரின் செருக்கை யடக்கச்சென்று, தாம் கூறுவதை யவர்கள் வரி வடிவாகிய எழுத்துக்களால் எழுத முடியாதவாறு தமது கவிகளில் சில மிருக பட்சிகளின் சத்தம் முதலிய ஒலிகளைக் கலந்து பாடியதால் அதை யெழுத முடியாத சங்கப் புலவர் தோல்வி யடைந்தனர்" என்று கூறப்படுகிறது.

இனி இம்மனோ சக்தியை யுங்களுக்கு வேண்டியமட்டில் நீங்கள் பெற என்ன முயற்சி செய்யவேண்டு மென்பதைக் கூறுகிறோம். (தொடரும்.)

சீடன்.

---

## மாதர் நெறிகள்.

(156-ம் பக்கத் தொடர்ச்சி.)

10. பொறுமை.—சகோதரிகளே! மாதர்களுக்குப் பொறுமை மிக்க அவசியமானது. கோபம் தன்னை உடையவர்களுக்கு எப்போதும் தீங்கு

செய்யத்தக்கது. ஆடவரைக் காட்டிலும் ஸ்திரீகளுக்குக் கோபம் அதிக நிங்கு விளைவிக்கும். சில மாதர் கோபத்தாலும், அடத்தாலும் குடும்பத்திற்கு மிக்க துக்கத்தை யுண்டாக்குகின்றனர். கணவன் கோபிக்கும்போது, அது சரியாயினும் தவருயினும், மனைவி பதிலுக்குக் கோபிப்பது மிகக் கெட்ட குணமாகும். அத்தகைய மனைவி கணவனுக்கு மிக்க வியாகூலமும், தொந் திரவும் கொடுக்கிறவளாவாள். அவள் சுலபத்தில் கணவன் அன்பை யிழந்து விடுகிருள். காண்போரும் இவள் கணவனை மதிப்பதில்லை யென்று இழிவு படுத்திக் கூறுவார்கள். கணவன் கோபிக்கும்போது சாந்தமாய்த் தன் குற் றத்தை யொப்புக்கொண்டு இனிய மொழிகளால் அவனுடைய கோபத் தைத் தணிக்க முயல்பவளே உத்தம மனைவியாகும். அவள் கணவன், பிறகு தான் தன் மனைவியின்மேல் கோபித்தது தவறென்றுணர்ந்து அவளுக்கு வருத்த முண்டாக்கியதற்கு மனம் வருந்தி, அவள் பொறுமையோடிருந்த தற்காக அவள்மேல் அதிக அன்பு காட்டுவான்.

11. அடம்.—சில மாதர் மிக்க அடங்கொண்டு தங்கள் பிரியப்படி நடக்க வேண்டுமென்று பிடிவாதம் செய்கிருர்கள். இதுவும் மிக்க கெட்ட நடக்கையாகும். புருடன் பிரியத்திற்கு மாருக நடப்பது பதிவிரதையின் செயலாகாது. அப்படிப்பட்ட மனைவி தன் கணவனுக்கு மிக்க வெறுப்பை யுண்டாக்குவாள். புருடன் வேண்டாமென்கிற காரியத்தைச் சந்தோஷத் தோடு விட்டுவிடுபவளே உத்தமமான மனைவியாவாள்.

12 தனியே வெளியிற் செல்லுதல், ஆடவர் கூட்டத்தில் நாணமின் றிப் பிரவேசித்தல், பேசுதல், அன்னிய ஆடவரோடு அநாவசியமாய் வார்த் தையாடுதல், கேலி பேசுதல், நகைத்தல், உரத்துப் பேசுதல், கடவுள் சந் நதிக்குச் செல்லும்போது சுத்தத்தை மட்டும் கவனிப்பதை விட்டுத் தேகத் தை யலங்கரித்துக் கொள்ளுதல், ஆடவர் பார்வையைக் கவரும் வண்ணம் அலங்காரம் செய்துகொள்ளுதல், இத்தகைய நடக்கைகள் மாதர்க்குத் தகாத நடக்கைகளாகும்.

13. கணவன் தொழிலை விட்டு வீடு வந்தவுடனே அவன் மனதிற்குத் துயரத்தையாவது, கோபத்தையாவது உண்டாக்கும் எந்தச் சமாசாரத்தை யும் கூறலாகாது; அவ்வாறே கணவனுக்கு அன்னமளிக்கும்போதும் அத் தகைய சங்கதிகளைப் பிரஸ்தாபிக்கலாகாது. அனேகம் மாதர் இவ்விஷயத் தைக் கவனிப்பதில்லை.

14. கணவன் வியாகூலத்தோ டிருக்கையில் தேறுதல் கூறி அவன் துயரம் நீங்கித் தைரியமும், சந்தோஷமு மடையும்படி செய்யவேண்டியது மனைவியின் கடமையாகும். கணவன் தான்செய்த ஒரு முயற்சியில் தவறிப் போய் அல்லது காரியத்தில் அபஜெயமடைந்து விசனத்தோடு மனைக்கு வந்தால் அச்சமையத்தில்தான் அவனுக்குத் தேறுதல் கூறித் துயரத்தை யொழிக்க வேண்டும். சில மாதர், அவன் ஜெயத்தோடு வந்தால் சந்தோஷ மாகக் கொஞ்சிக்குலாவுவதும், அபஜெயப்பட்டு முகவாட்டத்தோடும்,துயரத் தோடும் வந்தால் தாங்களும் முகத்தைச் சுளித்துக்கொண்டு "வெடிஞ்சி போச்சி, நீ போனவேலை எதுதான் கைகூடுது. வெடியாமூஞ்சி வேலைக்குப் போனல் வேலை யாப்டாலும் கூலி யாப்படலே என்ற கதைதானே. எண்ணைக்குத்தா உனக்கு வெடியுது. கட்டின நாளா இந்த அலைச்சலும் அவதியுந்தான் * * *" என்று கடுகடுப்போடு பாரதம் படிக்கத்

தொடங்கி விடுகிறார்கள். அவனுக்குப் பசி அகோரமாக எரித்தாலும் "அந்தோ!! இங்கேன் வந்தோம்" என்று இடி விழுந்தவனாக உட்கார்ந்து விடுகிறான். இத்தகைய மனைவியர் பேய்களுக் கொப்பானவர்க ளென்றே கூறலாம்.

புருடனுக்குத் துரோகம் செய்து விபசாரம் செய்யாம லிருப்பதாலேயே ஒரு ஸ்திரீ கற்புடையவளாகி விடமாட்டாள். அதனாற்றான் ஔவை பிராட்டியார் "கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை", அதாவது கணவன் வாக்குக்கு மீறி நடவாமையே கற்பு என்றார். கணவன் கட்டளைப்படி, அக்கட்டளை நீதியா, அநீதியா என்று சிந்திக்காமலே மனப்பூர்வமாய் அது கடவுள் வாக்கே யெனக் கருதி நடப்பதே கற்பிலட்சணம். அத்தகைய கற்பரசியிடந்தான் சாபானுக்கிரகம் முதலிய தெய்வீக சக்திகளுண்டாகும். கணவனுக்கு எவ்வகையாலும் எள்ளளவு மனவருத்தமேனும் உண்டாகாதபடி நடந்துகொள்ள வேண்டும். சில மாதர்கள், இக்காலத்திய தலை கீழ் நாகரீக வயப்பட்டோர், இது மூடத்தனமான விதி யென்று கருதுவார்கள். "என்ன அநியாயம் இது! கணவன் விபசாரம் செய்யச் சொன்னாலும் செய்வதோ?" என்பார்கள். அந்தோ! அந்தோ சகோதரிகளே! கணவனைக் கடவுளாகவே மதித்து தனக்குப் பிரியமில்லாத காரியத்தையும், தன் கணவன் கட்டளைக்காகச் சந்தோஷமாகச் செய்யும் கற்பரசி ஒருபோதும் பாபத்தை யடையாள். அதற்குமாறாக மகிமை யடைவாள். இயற்பகை நாயனாரின் மனைவி தன் கணவன் பிரியப்படி மாறுவேட மணிந்து ஒரு சிவனடியார்போல் வந்த பரமசிவன் பின்னால் சென்றதால் கணவன், மனைவி யிருவரும் பரமனருள் பெற்றார்களன்றோ. கபீர்தாஸின் மனைவி தன் கணவர் கட்டளைப்படி அடியார்களுக்கு அன்னமிடப்பண்டங்களளித்த வர்த்தகனிடம் சென்றாளன்றோ. அதனால பரந்தாமனைத் தரிசிக்கும் பெரும் பேறு பெற்றாளன்றோ. நளாயினி தன் கணவர் மனோபீஷ்டத்தை நிறைவேற்ற ஒரு தாசியின் வீட்டு முற்றத்தைக் கூட்டிச் சாணமிட்டுக் கோலந்தீட்டிப் பணி செய்தாளல்லவா. அவள் பொழுதுவிடியவொட்டாமற் செய்யுஞ்சக்தி பெற்றாளென்பது யாவரு மறிந்த விஷயமன்றோ? ஆகையால், சகோதரிகளே! கணவன் சொல தவறாது நடப்பதே கற்பு என்றுணர வேண்டும்.

**மருமகள், மாமியார்.**—ஒரு பெண் தான் இதுகாறும் கண்டிராத ஒருவனை மணம புரிந்து கொள்கிறாள். அப்படி யிருந்தும் அவன் அழகனாயினும், அழகற்றவனாயினும், புத்திமானாயினும், மூடனாயினும், அவனுக்குத் தன்மேல் அன்பிருப்பினும், வைபபாட்டியின்மேல அன்பு வைத்துத் தன்னைக் குரூரமாக நடத்தினாலும் அக்கணவனிடம் அன்புடையவளாகவே ஒழுகுகிறாள். உலகில் பெரும்பான்மை யிவ்வாறே. ஆனால், ஆதிமுதலே மாமியார் என்ற பெயரே அவளுக்கு வெறுப்பா யிருக்கிறது.

அவ்வாறே ஒவ்வொரு மாதும் தான் மருமகளாகவிருந்து தன் மாமியாரிடம் வாழ்ந்த அனுபவமுடையவளா யிருந்தும், தன் உயிரினும் தான் அருமையாகக் கருதும் தன் புத்திரனுக்கு மனைவியாக வந்தவளும், இனித் தன குடும்பத்திற்கே தலைமை வகிக்க வேண்டியவளும், குடும்ப கௌரவத்தைப் பாதுகாக்க வேண்டியவளுமாகிய மருமகள் வந்தவுடனே, அவளைத் தனக்குப் போட்டிக்காரியாகக் கருதுகிறவள்போல் அவள்மேல் வெறுப்பு கொண்டு அவள் சுயாதீனமாய் ஒன்றும் செய்யலாகாதென்று கருதுகிறாள்.

இதுகாறும் தான் செட்டா யிராமல் வீட்டுப் பண்டங்களைத் தாறுமாருகச் செலவழித்துக்கொண் டிருந்தும், மருமகள் வந்ததே உப்புச்சட்டி முதல் யாவற்றையும் பெட்டியில் வைத்துப் பூட்டிக்கொண்டு வேளை வேளைக்கு அளந்து படி யளிக்கத் தொடங்குகிருள். இதுகாறும் தன் பெற்ருேரகத்தில் செல்வாக்கோடும், சுயாதீனத்தோடும் வாழ்ந்துவந்த பெண் மாமியார் நடக்கையைக் கண்டதும் தான் அடிமைபோல் அவநம்பகமாய் நடத்தப்படுவதை யுணர்ந்து மனம் நொந்து மாமியார்மேல் வெறுப்படைகிருள். பிறகு சுலபமாகச் சச்சரவு ஏற்பட்டு இருவராலும் கலியாணம் செய்துகொண்டவன்பாடு பெருந் திண்டாட்டத்தில் வந்து விடுகிறது. அவன் தொழில் செய்து மாலை வீடுவந்ததும் இவர்கள் சச்சரவுகளுக்குத் தீர்ப்பு கூறுவதே முதல் வேலையாகிறது. அத்தகைய புருடன் மனோவேதனை பரிதாபம்! பரிதாபம்!!

விஷயம் இவ்வாறிருப்பதால் "மாமியாரை மெச்சின மருமகளில்லை, மருமகளை மெச்சின மாமியாரில்லை" என்ற வாக்கியம் ஓர் பழமொழியாக வுலகில் வழங்குவதைக் காண்கிருேம்.

சகோதரிகளே! உண்மையிவ்வாறே யிருக்கிறதன்றி மாமி மருமகள் இருவரில் ஒருவர்மேல் மட்டுமே குற்ற மிருக்கிறதென் றுரைக்கலாகாது. ஆயினும் மாமியார் சரியாய் நடந்துகொண்டால் அக்குடும்பத்தில் சச்சரவேயிராது. மருமகளும் தன் மாமியாரிடம், அன்போடேயே நடந்து கொள்வாள். ஆகையால் மாமியார்,

(1) தன் மருமகள் தாய் தந்தையர், உடன்பிறந்தார் அனைவரையும் விட்டுத் தமது குடும்பத்தில் வந்திருக்கிருள்.

(2) இனித் தன் பொறுப்பை யேற்றுக்கொண்டு தனக்கும் தன் மக்களுக்கும் வேண்டியவைகளைச் செய்து குடும்பத்தைப் பாதுகாக்க வேண்டியவள் அவளே.

(3) அவள் சந்தோஷமாக விருந்தால்தான் குடும்பகாரியங்கள் ஒழுங்காக நடைபெறக் கூடும்.

(4) அவள் சந்தோஷமாக விராவிடின் நமது புத்திரன் சந்தோஷம் குன்றும்.

(5) நாம் அவளைப் பட்சமாக நடத்தாவிடின் நமது புத்திரனுக்கு நம்மேல் வெறுப்பு தோன்றும்.

(6) நாம் இன்னும் கிழவயதடைந்து தேகபலம் குன்றிய காலத்தில் அவள்தான் நமக்குச் சகல பணிவிடைகளையும் செய்து நம்மை யாதரிக்க வேண்டியவள். நாம் நலியுற்றுப் பாயும் படுக்கையுமாக விருந்தால் மருமகள்தான் நம்மருகிலிருந்து நமக்குத்தக்க உபசாரம் செய்து, வேளைக்கு ஒளடத ஆகாராதிகளை யளித்துப் பாதுகாக்க வேண்டியவள். நாம் மாணமடைந்த பின்னும் சவத்திற்கு வேண்டிய சடங்குகளையும், பிறகு நடக்கவேண்டிய விஷயங்களையும் செய்ய வேண்டியவள் அவளே.

என்பனவாதிய விஷயங்களை மனதில் வைத்து, மருமகளைத்தன் புத்திரியாகவே கருதி அன்போடு நடத்திவரவேண்டும். குடும்ப விவகாரத்தில் ஏதோ குற்றங்கள் செய்யினும் அன்போடு புத்திகூறிச் சீர்திருத்த வேண்

டும். ஒவ்வொருசமயம் கோபங் காட்டினுலுங்கூட மனதில்மட்டும் நிலையான அன்புவைத்து நடத்தினல் மருமகள் அதை யுணர்வாளாதலால், மாமியார் ஒவ்வோர் சமயம் கோபித்தாலும் அது தன் நன்மைக்கும் தன் குடும்ப க்ஷேமத்திற்குமே யென்று கருதி மாமியார்மேல் வைத்த அன்புமாருமலே நடந்து கொள்வாள்.

இனி மருமகள் நடந்துகொள்ள வேண்டிய முறைமையைப் பற்றிக் கூறுவாம். (தொடரும்)

சீடன்.

---

## நல்லாயனும் நம் சம்பந்தமும்

முதலில் நல்லாயன் "ஆனந்தனைப்" பவிஷ்காரம் செய்யவேண்டு மென்று எழுதியதும் அதைப்பற்றி நாமும் நமது சந்தாநேயர்களில் இரண்டொருவரும் எழுதிய விடைகளும் நேயர்கள் அறிந்த விஷயங்களே.

அக்டோபர்மீ வெளிவந்த நல்லாயனில் அதன் ஆசிரியர் பின்னும் அவ்விஷயங்களைப்பற்றி மூன்றரைப் பக்கங்கள் வரைந்திருக்கிருர். ஒருவிஷயத்திற்கு அதை முழுமையும் நண்பர்கள் வாசித்தால் அவ்வாசிரியர் தன்மையும் குருத்தன்மையும் எவ்வளவினதென உங்களுக்கு நன்குவிளங்கு மென்ற விருப்பமே; ஆனல் மொத்தத்தில் அது சாரமற்ற பதரையொத்ததாக உங்களால் மதிக்கப்படு மாதலின், அதனல் ஆனந்தனது 4-5-பக்கங்களை நிரப்ப நமக்குப் பிரியமில்லை. ஆனதுபற்றி அவருடைய கருத்தை மட்டும் அவரது இரண்டொரு குறிப்புகளால் விளக்கி நமது முடிவைக் கூறிவிடுகிறோம்.—

எல்லா மதங்களாலும் பிரதிபாதிக்கப்படுவது ஒரே கடவுளே யென்பதையும் எல்லா மதங்களிலும் பயனுண் டென்பதையும் அடியோடு மறுத்துத் தமது மதம் ஒன்றே கடவுளா லுண்டாக்கப் பட்டதென்றும் அதில் கூறப்படுவதே மெய்க்கடவுள் என்றும் கூறுகிருர்.

(2) தமது மதம்தவிர மற்ற மதங்களைத் தாம் துவேஷிப்பதாகவே வெளிப்படையாய்க் கூறுவதோடு "நமது ஆசிரியர் இந்து மதத்தினராக விருப்பாராஞல் இதரமதங்களை, அவர் அலட்சியம் செய்யாதிரார். இல்லையேல் அவர் மெய்யான இந்துவல்லர்" என்று நம்மைக் கூறுகிருர். "நாம் இந்து மதத்தைமட்டுமல்ல, ஆனல் நமது காத்தோலிக் வேதத்தைத் தவிர வேறு எம்மதத்தையும் துவேஷியாம லிருக்கமுடியா தென்பது உண்மை." என்கிருர்.

(3) பிறகு "நாம் அன்னியமதத்தினரைத் துவேஷிக்கிறோமென்று அவர்களுடைய பொய்க் கொள்கைகளையும் அஞச்சார ஆசாரங்களையுமே துவேஷிக்கிறோ மென்றறிக" என்கிருர்.

(4) நாம் "ஆனந்தபோதினி"யை இங்கிலீஷ் மாதம் 15 அல்லது 16-ம் தேதியில் இவருக்கு அனுப்புகிறோம் என்று குறிப்பிட்டிருப்பதற்கு விடையாக அவர் "எத்தேதியில் அப்பத்திரிகை யனுப்பப்பட்டால்தா னென்ன? அதையெடுத்து வாசித்தாலன்றோ, அதில் உள்ளவை இன்னவை என்றறியலாகும். நாம் வாஸ்தவத்தில் அப்பத்திரிகையை விரும்பியெடுத்து வாசிப்பதே கிடையாது; ஆனதினுல் அதை இனி மாற்றுப் பத்திரிகையாக வாவது, வேற்றுப் பத்திரிகையாகவாவது அவ்வாசிரியர் எமக்கு அனுப்பா திருப்பாராக" என்று கூறுகிருர்.

(5) முடிவில் "அந்நியமத நூல்களையும் பத்திரிகைகளையும் வாசியாமல் இருப்பீர்களாக" என்று தம்மதத்தினர்க்குக் கட்டளையிடுகிறார்.

(" " இக்குறிகளுக் கிடையிலுள்ளவை நல்லாயனில் கூறப்பட்டிருப்பவைகளே.)

நேயர்களே ! இந்த ஆசிரியராகிய குரு மகானாகிய ஏசுக்கிருஸ்துவின் போதனைகளை யறிந்துள்ள விதத்தையும், இவர் அறிவின் நிலைமையையும் பற்றி மனப்பூர்வமாக விசனிக்கிறோமன்றி மற்றப்படி ஒன்றுங்கூற நமக்குப் பிரியமில்லை. இவர் வாக்கியங்களைக் கொண்டு நீங்களே யாவும் அறிந்து கொள்ள விட்டுவிடுகிறோம். இத்தகையார் மொழிகளைக் கவனிப்பதே பயனற்றவேலையாகு மென்பதே நமது துணிபு.

ஒருவிஷயம் நாம் இங்குவெளியிட வேண்டியதவசியம். நமது நண்பர் ம-ா-ா-ஸ்ரீ, S. S. Pillay என்பவர் கடிதத்தை நாம் வெளியிட்டபோது, அவர் நல்லாயனிலுள்ள வியாசத்தை எழுதியவர் "வைப்பார்புலி" என்று குறிப்பிட்டிருக்க, "வைப்பார்புலி" என்ற வார்த்தை தவறாக S. S. Pillay என்ற பெயரோடு சேர்க்கப்பட்டதைப்பற்றி விசனிக்கிறோம்.

இனி இத்தகைய ஆசிரியராகிய குருவின் கூற்றுகளுக்கு விடையேனும் கண்டன மேனும் எழுதுவது வீணான பயனற்ற வேலையாகும். இவர்கள் கூலிக்காக மதத்தைப் பரவச்செய்யும் தொழில் புரிவோர்களாதலின், எவ்வளவு உண்மையைக் கூறினும், இவர்கள் மனச்சாட்சிக்கு அவை சம்மதப்படினும், இவர்கள் "நான் பிடித்தமுயலுக்கு மூன்றுகால்களே" என்று ஒரேபிடியா யிருக்கப் பட்டவர்கள். இவர்கள் நமது மதத்தைப்பற்றி எவ்வளவு தூஷித்தாலும், ஞானம் என்பது என்னவென் றறியாமலே நம்மையெல்லாம்—எல்லா பிறமத்தினரையும்—அஞ்ஞானிகளென்று தூஷித்தாலும் அவற்றை நாம் கவனிக்கவேண்டியதே யில்லை. குருடர்களெல்லாம் "சூரியன் இருள்மயம்" என்பதால் ஒரு குறைவுமில்லை. சூரியன் பிரகாசமுடையவன் என்பது கண்பார்வையுடையோர்க்கெல்லாம் விளங்கியேதீரும்.

இதை யெழுதியபின் நவம்பர்ஸ் வெளியான "நல்லாயனை" யொரு நண்பர் கொணர்ந்து நம்மிடம் காட்டினர். அதில், ம-ா-ா-ஸ்ரீ D. G. A. பர்னன்டோ, வைகைவாசி, T. பொன்னுசாமி என்ற இருவரும் "ஆனந்த போதினி"க்கு விரோதமாக எழுதிய கடிதங்கள் வெளியிடப்பட் டிருக்கின்றன. எப்போதும் நியாயத்தை யொட்டி விஷயத்தைக் கூறுவது கஷ்டம்; மனம் போனபடி முன்பின் கருதாது வரைவது மிக்க சுலபம். அந்தோ! வாத்தியார் நின்றுகொண்டு பெய்......சீடர் ஓடிக்கொண்டே......வார்கள். இவர்கள் வரையும் நியாயங்களும், "ஆனந்தன்" மேல் கூறும் அவதூறுகளும் இவர்கள் குருவின் கூற்றிற் கொக்கவே யிருப்பதால், அவரும் சந்தோஷத்தோடு அவற்றை வெளியிட்டனர் போலும். உள்ள நியாயம் பகல் வத்திபோல் தானே பிரகாசிக்கிறது. ஆதலின், நாம் மேலே கூறியவாறு அறிவாளிகள் கண்டு எள்ளி நகைத்து ஒதுக்கத்தக்க நியாயமற்ற கூற்றுகளுக்கு நாம் கண்டனம் எழுதுவது வீண் வேலையாகும். நமது நண்பர்களும் பயனற்ற இவற்றைக் கவனித்து இவற்றிற்கு ஒரு மறுப்பு வரையாதிருக்கப் பிரார்த்திக்கிறோம்.

ஆனல் அன்னியமதத்தவர் நமது அநாதிமதத்தைச் சேர்ந்த சகோதர சகோதரிகளிடம் வலியவந்து அவர்கள் மனதைத் துர்ப்போதனைகளாலும் தந்திரங்களாலும் மயங்கச்செய்து, அவர்களைத் தங்கள் மதத்திற்கு வந்து சேரும்படி தூண்டுகிறவரையில், நம்மவர்கள் அம்மயக்கில் சிக்கியழியா வண்ணம் அவர்களைப் பாதுகாக்க வேண்டியது நமது கடமையாகையால், அதைச் செய்வதில் நாம் பூரணமுயற்சி யெடுத்துக்கொள்ள வேண்டு மென்பதைமட்டும் உங்களுக்கு வற்புறுத்திக் கூறுகிறோம். அதைப்பற்றிய அவசியமான விஷயங்களை நாம் அப்போதைக்கப்போது வெளியிடத்தவறோம்.

பத்திரிகாசிரியர்

---

## இல்லறம்—மறுபிறப்பு.

(155-ம் பக்கத் தொடர்ச்சி.)

உலகத்திலுள்ள மட்டும் ஆன்மா ஒரு சரீரத்துடன் கூடியே யிருப்பன். மோட்சத்தில் சரீரமில்லை யென்பது சாஸ்திரங்களி னுண்மையான கருத்து. ஆன்மாவுக்கு மூவகையான சரீரங்களுண்டு: அவை ஸ்தூலம், சூக்குமம், காரணமென்பனவாம். சூக்குமசரீர மெப்போதுமுண்டு. ஸ்தூலசரீரம் அழிந்தாலும் சூட்சுமம் அழிவதில்லை; இச்சூக்கும சரீரம் யோகக்காட்சியா லறியத்தக்கது; சொப்பனவஸ்தை யிந்தச் சூக்கும சரீரத்துக்கே யென்பர் பெரியோர். சொப்பனம் தெய்வாநுக்கிரகத்தால் நன்மை தீமைகளை யறிவிக்கும் பொருட்டுண்டாகும். இச்சரீரமெடுத்து அறிவுதோன்றிய பின் கண்டதும் கேட்டதும் நித்திரையில் காணப்படுகின்றன. இவ்விரண்டு மல்லாத ஓர் வகைச் சொப்பனமுண்டு. அதாவது, பிறந்தநாள் முதல் கேளாததும் காணாததுமான விஷயங்களைக் காண்பது; இதனையே பூர்வஜன்மவாசனை யென்பர். முற்சனனங்களில் நடந்த விஷயங்கள் ஓரொருகாலத்தில் சூக்கும சரீரத்துடன் கூடிய ஆன்ம அறிவில் புலப்படுவது; இதுவும் ஆன்மாவுக்குப் பூர்வ ஜன்ம முண்டென்பதை ஸ்திரப்படுத்தும்; இச்சொப்பனம் கன்மங் காரணமாகவே யுண்டாவது.

இனி, "புண்ணியம் பாவம் என்பன உலகத்தார் செய்துகொண்டதோர் கட்டுப்பாடு; இயற்கையிலில்லை; ஆதலால் அவைகாரணமாக மறுபிறப்புண்டாகாது" என ஒரு சாரார் வாதிப்பார்கள். இன்னும் அவர்கள் "பாபம் புண்ணிய மென்பன ஒரு பொருளல்ல. ஆறிந்திரியங்களாலு மறியப்படாதவை. ஒன்றாலுமறியப் படாதவையும் பொருளல்லாத வையுமான, புண்ணிய பாவங்கள் பிறப்புக்குக் காரணமா மென்பது பொருந்தாது. ஒவ்வொரு தேசத்தில் ஒவ்வொரு கூட்டத்தார் தங்கள் தேசத்துச் சுகதுக்கங்களுக்காகச் செய்துகொண்ட ஏற்பாடுகளேயாம். நன்மையானதைப் புண்ணிய மென்றும், தீமையைப் பாப மென்றுங் கூறினர். இது தேசநன்மைக்காக ஏற்படுத்தின கட்டுப்பாடேயாம். இத்தேசத்தில் மட்டும் சிலர் தமதினத்தார் பிழைக்க வேண்டிப் பயனற்ற கட்டுப்பாடுக ளடங்கிய சில புத்தகங்களை யெழுதிவிடுத்தனர். அது கொண்டு மறுபிறப்புண் டென்பது பொருந்தாது" என்றுங்கூறுவர்.

புண்ணிய பாவங்கள் ஜனங்களின் சுகதுக்கங் களுக்காகவே யேற்படுத்தினது திண்ணம். புண்ணிய பாவங்க ளுண்டென்பதிற் றடையே யில்லை. ஆயினு மிவர்கள் கூறுகிறபடி நமது தேசத்துப் பெரியோர் எழுதி

வைத்தது காரணமில்லாத கட்டுப்பாடல்ல. சிருட்டிகால முதல் கன்மம் தொடர்ந்து வருமென்பதை யிவர்க ளொப்பார். நாமவ்வாறு கூறுவதில்லை. ஏனெனில் அது உண்மையல்ல; எப்பொழுது சிருட்டி யேற்பட்டதோ அதுமுதலாகச் சீவான்மாக்கள் செய்த கன்மங்களுக் கேற்பவே கூன், குருடு, செவிடு முதலான சரீரங்களும், குற்ற மற்ற அழகிற் சிறந்த சரீரங்களும் ஜீவான்மாக்களுக் குண்டாகின்றன வென்பதை முன்னரே கூறினோம். இதனையொப்பாவிட்டால் இதற்குத் தகுந்த வேறு காரணங் கூறவேண்டும். அவ்வாறு சரியான காரணங் கூற எவராலு மாகாது. ஆதலால் புண்ணிய பாவங்களைக் கொண்டே ஜீவான்மாக்கள் மறுபிறப்பையும் அப்பிறப்புக்கேற்ற சரீரங்களையு மடைகின்றன வென்பதே துணிபு. இப்புண்ணிய பாவங்கள் உலகத்தார் செய்த கட்டுப் பாடுகளாயின் சகல ஜனங்களும் அதற்கிசைந்து நடத்தல் கூடாத தேயாம். ஆஸ்திகராயுள்ளவர்கள் எல்லாரும் புண்ணிய பாவங்களுண்டென்றே யொப்புக்கொள் கின்றார்கள். அவற்றுட் சில வேறு பாடுகளிருந்தாலும் பாவபுண்ணியங்க ளில்லை யென்று ஆஸ்திகர் மறுக்கத் துணியார்; அது கடவுள் செய்த ஏற்பாடு என்பதே ஆஸ்திக ரெல்லாருக்கு மொப்ப முடிந்தது. கொள்கை வேறு பாட்டினால் ஒருவரையொருவர் விரோதிக்கும் ஆஸ்திகரும் பாவபுண்ணியங்களில் மாத்திரம் விரோதப்படுவ தில்லை; ஏனெனில், அது கடவுளாலே யநாதியிலேயே விதித்தவரம்பு; அவ்வரம்பு கடக்க எந்த ஆஸ்திகனுந் துணியான். ஆதலால் அநாதியிலேயே கடவுள் ஏற்படுத்திய விதிவிலக்குகளே புண்ணிய பாவங்களாமென்க.

மனிதர்கள் உண்ணல், உடுத்தல், உல்லாசமாயிருத்தலாதிகளைத் தேச காலங்களைக் கவனித்தே செய்வர். மிருகங்களோ தேசகாலங்களையும் எவ் விதமான வேறு சௌகரியங்களையும் நோக்காது மனங்கொண்டவாறே நடத்தும். ஒருசமையம் மனிதரும் அவற்றைப்போலவே நடக்கமுயன்றால் அதுவும் பாவபுண்ணியங்களின்பாற் படுமென்று அவர்கள் ஒப்புவார்போலும். எந்தத் தேசத்திலும் சிலராயினும் தமது மனம் போனவழி நடப்பவரில்லை. அப்படியானால் மானுஷிகத்திற்கும் மிருகங்களுக்கும் வேற்றுமையில்லாமற் போம். ஆதலால் புண்ணிய பாவமென்பன எல்லாருள்ளத்திலு மெழுந் தருளியிருக்கும் பரம்பொருளே அவ்வத் தேசத்தின் இயற்கைக் கேற்ப ஏற் படுத்தியவைகள். ஆதலால் எல்லாத் தேசத்திலுள்ள ஆஸ்திகரும் புண் ண்ணிய பாவங்களுண்டென்பதிற் சந்தேகப்படுவதில்லை. ஈசனருளாலேற் பட்டதனாலேயே அது அழியாமல் எங்கும் நிலைபெற்றிருக்கின்றது. மனிதரா லேற்படுத்தப் பட்டதாயின் நாளடைவிற் சொரூபமாறி யழிந்து போயிருக்கும்.

இனி "ஈசுவரனே புண்ணிய பாவங்களை யேற்படுத்தினானெனின், அது தேச காலங்களால் வேறுபாடடைவதேன்? ஈசுவரன் ஒரு தேசத்தில் பிரிய மும், மற்றொரு தேசத்திற் பிரியமில்லாமலு மிருப்பதேன்?" என்பர். புண் ணிய மென்பது மனிதர்கள் கடவுளுக்குச் செலுத்தவேண்டிய கடமைகளி லொன்றே. ஆயினும், கடவுளாராதனையே புண்ணிய மென்று நமது நூல் கள் கூறவில்லை. பற்பல புண்ணியங்கள் தேகத்தையும், ஜீவனையும், சரீரத் தையும் சுத்திசெய்யுங் கருவிகளாம். ஜீவனும், சரீரமும் தேசகாலங்களால் வேற்றுமை யுடைவனவல்லவா? ஆதலால், சர்வ ஞானமுள்ள கடவுள் அவ்வத் தேசங்களுக்கும், அங்குள்ளவர்களுக்கும் தக்கபடி யேற்படுத்தினார் என்பதே துணிபு. ஏனென்றால், தேசகாலங்களால் ஜீவான்மாக்களின் சக்தி

ஏறியுங் குறைந்து மிருக்குமல்லவா? சக்தி யுள்ளவர்களும், சக்தி குன்றினவர்களும் ஒரே தர்மத்தை யனுஷ்டிக்க வியலுமா? இயலாதன்றே? அது கொண்டே தேசவியல்பிற்கும், அங்குள்ள ஜீவான்மாக்களின் சக்திக்கு மேற்பச் சர்வ சக்தியுள்ள கடவுள் அத்தகைய வித்தியாசங்களை ஏற்படுத்தினர். இப்படிச் செய்ததினால் கடவுள் விருப்பு வெறுப்பற்றுக் கருணை காரணமாகவே செய்தாரென்பது விளங்கும். இப்புண்ணிய பாவங்க ளநாதியாதலால், அவற்றின் வேறுபாடுகொண்டே மறுபிறப்புண் டென்பதும் சாதிக்கப்படும்.

இனி, பிறப்பிறப்பு இரண்டு மிச்சரீரத்திற்கே யாதலால், இச்சரீரம் இறந்தபின் எக்காலத்தும், எவ்வாற்றாலும் இவ்விதமே சரீர மமையப் பெறாது என்பர் ஒரு சாரார். அதாவது, ஆத்திகர் கொள்கைப்படி சரீரமே பிறக்கும், சரீரமே யிறக்கும். ஆன்மா அழிவற்ற வநாதிப் பொருளாதலால், இறப்பதும், பிறப்பதுமில்லை; ஆதலால், மறுபிறப் பென்பது ஜீவனுக் கமையாது; சரீரத்துக்கும் பொருந்தாது. ஏனெனில், சரீரம் நாம் காணும் பொழுதே நசித்தொழிதலால், அது மறுபடி யிவ்விதமே யமையு மென்பது ஒப்பத்தகாது. உலகத்தில் ஒருதர மழிந்த சரீரம் மீண்டு மவ்வாறுண்டானதை ஒருவருங் கண்டதில்லை; அடைந்தனுபவித்தது மில்லை. அப்படி யுண்டானால் இது அந்தச் சரீரமே என்று நினைத்தற்கு ஆதாரம் உண்டு. சுடப்பட்டாவது, பூமியிற் புதைக்கப்பட்டாவது, மிருகாதிகளாற் புசிக்கப் பட்டாவது ஒழிந்து போன சரீரம் மறுபடி வந்ததாய்க் கண்டதுமில்லை; கதைகளாலும் கேட்டதில்லை. ஆராய்ந்து பார்க்குங்கால் ஆத்திகர் நாத்திகரெல்லாரும் பிறப் பிறப்புச் சரீரத்துக்கே யென ஒப்பவேண்டும். அவ்வாறிருப்பின் மறுபிறப் புண்டென்பது வீண் வழக்கா மென்பதே யிக்கேள்வியின் கருத்தாம். இதனைச் சிறிதாராய்வோம்.

அவர் கூற்றின்படி சரீரத்துக்கே ஜனனமும், மரணமும் என்பது உண்மையே. அது கொண்டே யாம் மறுபிறப் புண்டென்று கூறவந்தோமில்லை. ஜீவனுக்கோ அஃதுண் டென்றேம். நித்தியனான ஜீவனுக்குப் பிறப்புண்டாயின் அவனழிவதும் உண்மையாமே; அங்ஙனமாயின், அவன் நித்தியனாவ தெவ்வாறெனில், மறுபிறப் பென்பது ஜீவனுச்குமில்லை, சரீரத்துக்கு மில்லை. ஜீவன் சரீரமின்றி யிராதென்றும், ஸ்தூல சூட்சும காரண சரீரங்களி லொன்றைப் பற்றியே நிற்குமென்றும் முன்னர் கூறினேம். அவ்வாறே ஜீவன் ஒரு சரீரத்தை விட்டபின், செய்த கருமத்தின்படி வேறொரு சரீரத்தைப் பெறுவதே மறுபிறப்பென்று நமது நூல்கள் கூறுகின்றன; நமது பெரியோரும் அவ்வாறே கூறுகின்றனர். அவ்வளவேயன்றி இதே தேகம் மறுபடி யுண்டாவதில்லை. (தொடரும்.)

சிவானந்த ஸாகர யோகீஸ்வரர்.

---

## தபால் கொள்ளைக் காரர்கள்.

(159-ம் பக்கத் தொடர்ச்சி.)

இதனால் தான், ஆபத்தான சமயத்தில் நமது அம்பலவாணன் அவனைச் சந்திக்க நேர்ந்தது.

அவன் ஆனந்தலிங்கின் பெயரையும் அவனுடைய அபூர்வ சாமர்த்தியச் செயல்களையும், நேர்மையான நடக்கைகளையும் கேள்விப்பட் டிருக்கி

ருன். சிறைச்சாலையில் இருவரும் சந்தித்தபோது நெடுநேரம் சம்பாஷித்துக் கொண் டிருந்தார்கள். அம்பலவாணன் தனக்குத் தெரிந்த எல்லா விஷயங் களையும் சற்றேனும் களங்கமின்றி ஆனந்தஸிங்கிடம் கூறினன். ஆனந்தஸிங் அப்போதுதான் கோமளவல்லி மறுபடி அத்துஷ்டர்களிடம் சிக்கிக்கொ ண்ட சங்கதியை யறிந்தான்.

ஆனந்தஸிங் எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டபின் அம்பலவா ணனை நோக்கி,

"நீ யிதற்கெல்லாம் சற்றும் அஞ்சவேண்டாம். நீ அக்கன்னிகையைச் சிறையினின்றும் மீட்டது மிக்க பெருந்தன்மையான செய்கை. ஆனல் அதனல் உனக்குப்பெரிய இக்கட்டு நேர்ந்தது. ஆயினும் பரவாயில்லை. ஆனந்தஸிங் செத்தவர்களி லிருந்து பிழைத்துக்கொண்டு வந்துவிட்டான். அந்தப் பெண்ணைக் களவாடிக்கொண்டு வந்தவர்களும், தபால் வண்டியைக் கொள்ளையடிக்கும் பரம துஷ்டர்களும் இன்னம் பெருங் குற்றங்களைச் செய்தவர்களும் சாமிநாதன் இரங்கநாதன் என்ற இந்த இரண்டு சண்டா ளர்களே. கடவுள் தயவாய் அத்துஷ்டர்களின் குற்றங்களை ருசுப்படுத்தி நிரபராதிகளைக் காப்பாற்ற எனக்குச் சக்தியளிப்பார் என்பது உண்மை யாகையால் நீ இதற்குச் சற்றும் பயப்படாமல் பூரண தைரியத் தோடிரு" என்ருன்.

இம் மொழிகளைக்கேட்ட அம்பலவாணன் மிக்க நம்பிக்கையும் தைரி யமும் சந்தோஷமு மடைந்தான்.

---

## 9-வது அத்தியாயம்.

இப்போது அரசஞ்சாலைத் திருப்பம் என்று ஆனந்தஸிங்கிடம் அகப் பட்ட உளவு முதல் தாமானது. இதைவிட மேலான உளவு அகப்படாது; ஆகையால் ஆனந்தஸிங் மிக்கஜாக்கிரதையோடு இரங்கநாதனுடைய நிழலை விடாமல் பின்பற்றிக் கொண்டே யிருந்தான்.

இரங்கநாதன் அவ்வளவு காலமும் அந்த ஒரே ஹோட்டலிலேயே தங்கியிருந்தான். தன் பிரதான விரோதியாகிய ஆனந்தஸிங் மடிந்துபோன வரையில் தன்னைப் பிடிப்பவன் வேறு யாருமில்லை யென்ற நிம்மதி அவ னுக்குப் பூரணமா யிருந்தது.

கடைசியில் அரசஞ்சாலை திருப்பத்திற்கு இரங்கநாதன் போகவேண் டிய வெள்ளிக்கிழமை வந்தது. ஆனந்தஸிங் மிக்கஜாக்கிரதையோடு அவ னைப் பார்த்துக்கொண்டே யிருந்தும் எப்படியோ அன்றையதினம் அவன் மாயமாய் மறைந்து விட்டான். ஆனந்தஸிங் என்ன சாமார்த்தியத்தோடு தேடிப்பார்த்தும் அவன் அகப்படவில்லை.

ஆனந்தஸிங் இரயில் ஸ்டேஷனுக்குச் சென்று தந்திரமாய் விசாரித் தான். இரங்கநாதன் அமலாபுரம் செல்வதாகத் தன் பெட்டிக்குச் சீட் டொட்டி ஸ்டேஷனில் ஒப்புவித்திருக்கிருன் என்று தெரிந்தது.

ஆனல், அந்த வண்டியோ முன்னமே போய்விட்டது. ஆனந்தஸிங் சிந்தித்தான். முன் வண்டி சென்றபோது தான் ஸ்டேஷனில் இருந்தான். அப்போது அமலாபுரம் செல்லும் வண்டியில் இரங்கநாதன் செல்லவில்லை. சற்றுநேரம் ஆழ்ந்து சிந்தித்தான். அட்டா! அவன் மாறுவேட மணிந்து

சென்றிருப்பான் என்று மனதிற்பட்டது. எப்படியோ மறுபடி ஏமாற்றி விட்டான். தான் ஏமாந்து போனது ஆனந்தவிங்கிற்குத் தன்மீதே மிக்க கோபமா யிருந்தது.

அரைமணிக்குள் அமலாபுரம் போகும் இன்னொரு வண்டி வந்தது. அதில் ஏறி அமலாபுரத்தி லிறங்கி மெயில் வண்டிக்காக எதிர்பார்த்திருந்தான். சுமார் ஏழு மணிக்கு மெயில் வண்டி வந்தது. அதிலிருக்கும் தபால் வண்டியில் சாமிநாதன் இருப்பதைக் கண்டான். உடனே ஆனந்தவிங்குக்கு மனதில் ஒருவித உற்சாக முண்டாயிற்று. மிக்க ஜாக்கிரதையோடு அவ்வண்டியையே கவனித்துக்கொண் டிருந்தான்.

ஆச்சு வண்டி புறப்பட்டும் வேளையும் நெருங்கிவிட்டது. அப்போது நரைத்த நீண்ட தாடியும், மீசையுமுடைய ஒரு கிழவன் வந்து சாமிநாதனிடம் பேசிக்கொண் டிருந்தான். கடைசியில் வண்டி மெதுவாய்ப் புறப்பட்டது. அப்போது அக்கிழவன் சாமிநாதன் கரத்தைப் பற்றிக்கொண்டு தபால் வண்டியில் ஏறிக்கொண்டான். அதைக் கண்டதே ஆனந்தவிங் முகத்தில் சந்தோஷக் குறி யுண்டாயிற்று. உடனே அவன் தபால் வண்டிக்குப் பின்னுலிருக்கும் மூன்ருவது வண்டியில் போய் ஏறிக்கொண்டான். அக்கிழவன் எவ்வளவு சாமார்த்தியமாய் மாறுவேட மணிந்திருந்தாலும் அவன் இரங்கநாதனே யென்று ஆனந்தவிங் தெரிந்துகொண்டான்.

வண்டி வேகமாய்ப் போய்க்கொண் டிருக்கிறது. ஆனந்தவிங்கு ஒரு மூலையில் நித்திரை செய்பவன்போல் படுத்துத் தன் முகத்தைப் பாதி மூடிக்கொண்டான். இரவு சுமார் பதினேரு மணி யிருக்கும்; வண்டியிலுள்ள ஜனங்க ளெல்லாம் நித்திரை போகிருர்கள்.

அச்சமயம் மெயில் வண்டியிலிருந்து ஒரு மனிதன் அந்த வண்டிக்குள் வந்து நித்திரை செய்யும் யாவரும் நன்ருய்த் தூங்குகிருர்களா வென்று பார்ப்பதற்காக நிதானமாய் ஒவ்வொருவரையும் குனிந்து குனிந்து பார்த்துக்கொண்டே சென்ருன். கடைசியாக நமது ஆனந்தவிங்கையும் பார்த்தான். பார்த்துவிட்டுக் கடைசியில் வண்டியின் கோடியில் சென்று அங்கிருந்த கண்ணுடிச் சாளரத்தின் வழியாக வெளிப்பக்கத்தைச் சற்றுநேரம் பார்த்துவிட்டுத் திரும்பி வண்டியின் உட்பக்கம் அறைகளின் ஓரமே செல்லும் நேர்வழியே சென்ருன்; அம்மனிதன் இரங்கநாதனே.

ஆனந்தவிங் அவன் நடக்கைகள் யாவும் மிக்க ஜாக்கிரதையோடு கவனித்துக்கொண்டே யிருந்து அவன் வண்டியின் கதவை மூடிக்கொண்டு சென்றதே மிக்க சுறு சுறுப்போடு துள்ளி யெழுந்தான். தன் வேலை தொடங்கவேண்டிய வேளை வந்துவிட்டதால் அவன் கண்களில் ஒருவிதப் பிரகாசம் உண்டாயிற்று.

ஆனந்தவிங் பூனைபோல் நடந்து வெளியிலுள்ள கால் படி வழியாய் பக்கத்து வண்டிக்குச் சென்ருன். அங்கு சாமான் வண்டியின் பின்பக்கக் கதவு இருக்கிறது. அவன் கவனிக்கவேண்டிய மெயில் வண்டி, அந்த வண்டிக்கும், முன்னே யிருக்கும் சாமான் வண்டிக்கு மிடையிலிருக்கிறது.

அவ்வண்டியின் கோடியில் கண்ணுடிக் கதவாவது, சாளரமாவது இல்லை. கதவை யசக்கிப்பார்த்தான்; அது திறக்கக் கூடியதாயில்லை. எட்டிப் பூட்டுத் துவாரத்தின் வழியாய்ப் பார்த்தான். உள்ளே மூட்டைகளின் பேரிலும், பெட்டிகளின் பேரிலும் வேலை செய்யும் ஆட்களில் சிலர் உட்கார்ந்து சுருட்டுப் பிடித்துக்கொண் டிருந்தார்கள்.

காலம் கழிந்துகொண்டே யிருக்கிறது; தன் கெடியாரத்தை யெடுத்துப் பார்த்தான். பதினென்றடித்துப் பத்து நிமிடங்களாயிற்று. அவன் மனம் பதைத்தது; ஒவ்வொரு வினடியும் வீணே கழிவது அவன் மனதிற்குப் புண்ணுயிருந்தது. கால் படியிலிருந்தே எட்டிப் பார்த்தான்? கார்ட் வண்டியிலிருக்கும் விளக்கின் வெளிச்சத்தால் மெயில் வண்டியின் கதவு திறந்திருந்தது என்று அறிந்துகொண்டான்.

அச்சமயம் வண்டி மிக்க வேகமாய்ச் சென்றுகொண் டிருந்தது. கொஞ்சம் நிதானமாய்ச் செல்ல ஆரம்பித்தது. ஆனந்தவிங் என் என்று கவனித்தான். அங்கு வண்டி ஒரு பெரிய வளைவைத் தாண்டத் தொடர்கிறது. ஓரத்திலுள்ள பிரம்மாண்டமான மரங்களின் உச்சிமேல் இரயிலில் இருக்கும் வெளிச்சம் தாக்குகிறது. (தொடரும்.)

ஆரணி-குப்புசாமி முதலியார்.

---

## பொது விஷயங்கள்

**ஜலமண்டலி விஷம்.**—ஜலமண்டலியானது ஒரு மனிதனைக் கடித்த மாத்திரத்தில் அவனுக்குக் குளிர் கண்டு தேகம் வியர்க்க ஆரம்பிக்கிறதை யாவரும் பார்க்கலாம். அவனுடைய உடம்பு பனிக்கட்டியைப்போல் அவ்வளவு குளுமையாகி விடுகிறது. விஷம் ஏற ஏற அவனுக்குப் பலம் குன்றித் தாதுக்களெல்லாம் நின்று அவன் இறந்து விடுகிறுன். எந்த மருந்தும் ஜலமண்டலி விஷத்தை நிறுத்துமென்று தைரியமாகச் சொல்லமுடியாது. ஆனல் சில சமயங்களில், ஜலமண்டலி கடித்தவுடன் அவனுக்கு ஒரு அவுன்ஸ் வாழைச்சாறை இரண்டு அல்லது மூன்று மணிக்கொருதரம் கொடுத்து வந்தால் ஜலமண்டலி விஷம் நீங்கி அவன் சொஸ்தப்படுவானென்று ஸ்ரீமான் பி. வி. கோபாலகிருஷ்ணராவ் இந்து பத்திரிகையில் எழுதியுள்ளார்.

**ஹிந்து மதத்துக்குத் திரும்பினர்.**—சுமார் ஐந்து வருஷங்களுக்கு முன் கிறிஸ்தவ மதத்தில் போய்ச் சேர்ந்துகொண்ட ஸ்ரீமான் முகுந்த ராவ், ஸ்ரீபதி ராவ் ஹண்டதேஷ்முக் என்றவர் இம்மாதம் 20-ந் தேதி பம்பாய் ஹிந்து மதபிரசார சங்கத்தின் உதவியால் மீண்டும் ஹிந்து மதத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டார். ஸ்ரீமான் ஸுந்தர ராவ், பி. வைத்தியா அச்சமயம் ஆசார்யாக இருந்து சடங்குகளை நடத்தினர் என்று மேற்படி சங்கத்தார் அறிவிக்கின்றனர்.

**குறிப்பு:**—புத்தி மயக்கால் அன்னியமதத்தில் சேர்ந்து பிறகு உண்மையறிந்து வருந்தும் நம்மவர் எண்ணிறந்தோர் உளர். நாம் மறுபடி அவர்களைச் சேர்த்துக் கொள்ளாததாலேதான் அவர்கள் பிறக்கும் வழி யில்லையென்று மனவெறுப்போடு அம்மதத்திலிருந்து விடுகிருர்கள். அன்னிய மதஸ்தர்களும் நம்மவர்களை யொருதரம் எப்படியாவது ஆசைகாட்டி மயக்கித் தந்திரமாய்த் தங்கள் மதத்தில் சேர்த்துக்கொண்டால் பிறகு இவர்கட்கு மீட்சியில்லை யென்றபடி செய்கிருர்கள்.

இனியும் சும்மா விராமல் சுலபமான பிராயச் சித்தத்தால் அத்தகையோரை மறுபடி நமது மதத்தில் சேர்த்துக்கொள்ள ஏற்பாடு செய்வதை நம்மவர் கவனிக்க வேண்டும். பத்திரிகாசிரியர்.

# “ஆனந்த போதினி” பஞ்சாங்கம்.

துன்மதிஸ்ரீ மார்கழிமீ—சாலிவாகனம் 1844—கலி 5023
பசலி 1330-31—கோல்லம் 1096-97—ஹிஜரி 1339-40
இங்கிலீஷ் 1921ஸ்ரீ டிசம்பர்மீ 1922ஸ்ரீ ஜனவரிமீ

| மார்கழிமீ | டிசம்பர்மீ<br>1922ஸ்ரீ ஜனவரிமீ | வாரம். | திதி. | நக்ஷத்திரம். | யோகம். | விசேஷங்கள். |
|---|---|---|---|---|---|---|
| 1 | 15 | வியா | ○ 4-43<br>பிர58-25 | மிரு-32-28 | மர-60 | தனுரவி நா-3-45 |
| 2 | 16 | வெ | து51-35 | திரு-27-42 | சித்-60 | மந்திரம் ஜெபிக்க |
| 3 | 17 | சனி | திரி41-27 | புன-22-20 | சித்-60 | கோடியுடுக்க |
| 4 | 18 | ஞா | சது37-22 | பூச-17-0 | சித்-60 | வித்தியாரம்பம் ஸ்ரீமந்த |
| 5 | 19 | திங் | பஞ்30-40 | ஆயி-11-55 | சி11-55ம | பிரயாணத்திற்கு விலக் |
| 6 | 20 | செ | சஷ்24-40 | மக-7-28 | சித்-60 | கரிநாள் |
| 7 | 21 | புத | சப்19-35 | பூர-3-40 | அமி-60 | ஆயுதம் பயிற்ற |
| 8 | 22 | வியா | அ15-17 | உத்-0-50<br>அஸ்-58-58 | மர0-50சி | குளம் கிணறுவெட்ட |
| 9 | 23 | வெ | நவ12-3 | சித்-58-2 | சித்-60 | கரிநாள் |
| 10 | 24 | சனி | தச9-42 | சுவா-58-0 | சித்-60 | சபல ஏகாதசி |
| 11 | 25 | ஞா | ஏக8-15 | விசா-58-45 | மர-60 | கரிநாள் |
| 12 | 26 | திங் | துவ7-45 | அனு-60-0 | சித்-60 | பிரதோஷம் |
| 13 | 27 | செ | திர7-46 | அனு-0-22 | சித்0-22ம | பிரயாணத்திற்கு |
| 14 | 28 | புத | சது9-20 | கேட்-2-55 | சித்2-55ம | அமாவாசை |
| 15 | 29 | வியா | ● 11-35 | மூல-6-25 | சித்-60 | |
| 16 | 30 | வெ | பிர14-52 | பூரா-10-55 | பி10-55சி | |
| 17 | 31 | சனி | து19-17 | உத்-16-30 | சித்-60 | |
| 18 | 1 | ஞா | திரி25-35 | திரு-23-2 | அ28-2மர | |
| 19 | 2 | திங் | சது31-5 | அவி-30-10 | சித்-60 | |
| 20 | 3 | செ | பஞ்37-50 | சதை-38-1 | மர60 | |
| 21 | 4 | புத | சஷ்44-33 | பூரட்-48-18 | அ48-18சி | |
| 22 | 5 | வியா | சப்50-30 | உத்-52-5 | சித்-60 | |
| 23 | 6 | வெ | அ55-37 | ரேவ-58-45 | சி58-45அ | |
| 24 | 7 | சனி | நவ58-2 | அசு-60-0 | சித்60 | குதிரைவாங்க |
| 25 | 8 | ஞா | தச58-50 | அசு-2-50 | சித்2-50பி | அடுப்புவைக்க |
| 26 | 9 | திங் | ஏக57-29 | பர-4-55 | சித்4-55ம | கிருத்திகை தீபம் |
| 27 | 10 | செ | து53-50 | கிரு-4-48 | சித்4-42அ | கூர்ம துவாதசி |
| 28 | 11 | புத | திர48-27 | ரோ-2-30 | சித்60 | பிரதோஷம் |
| 29 | 12 | வியா | சது41-32 | மிரு-2-40<br>திரு-53-5 | மர60 | ஆருத்திரா தரிசனம் |
| 30 | 13 | வெ | ○ 33-37 | புன-46-43 | சி46-43ம | போகிபண்டிகை |

| | | | |
|---|---|---|---|
| கே | | | |
| | 6உ தனு-பு<br>11,, தனு-சு<br>23,, து-செ | | |
| சூரி | சுக்<br>புத | செ | ராகு<br>சனி |

PRINTED & PUBLISHED BY N. MUNISAWMI MUDALIAR AT THE “ANANDA BODHINI” POWER PRESS, 15, VENKATESA MAISTRY STREET, MADRAS.